# தின பூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 251 ஆவணி 16 | RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, திங்கள், செப்டம்பர் 01, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00





### சென்னை பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில்

## இதுவரை 43.33 லட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகள் பயோமைனிங் முறையில் அகற்றப்பட்டுள்ளன



சென்னை,செப்.01

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சராசரியாக நாள் ஒன்றுக்கு 6,300 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. 426 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் வசித்தும், வந்து சென்றும் வருகின்றனர்.

, சென்னை மாநகரினை சிங்காரச் சென்னையாக திகழச் செய்திடும் வகையில் சாலைகள், தெருக்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகள், பாலங்கள், பேருந்து நிறுத்தங்கள், மயான பூமிகள் உள்ளிட்ட பொது இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் கட்டடம் மற்றும் கட்டுமானக் கழிவுகள் அகற்றுதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

மண்டலம் 1 முதல் 8 வரையில் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திலும், மண்டலம் 9 முதல் 15 வரை பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் வளாகத்திலும் திடக்கழிவுகள் பல்லாண்டு காலமாக கொட்டப்பட்டு வந்தன.

மாநகர் விரிவாக்கம், மக்கள்தொகை அதிகரிப்பு, வணிக செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால், பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய இரண்டு வளாகங்களிலும் குப்பைகள் கொட்டுவது அதிகரித்து, சுற்றுச்சூழல் மாசு ஏற்படும் நிலை உருவானது .

இதனைத் தொடர்ந்து, பெருங்குடியிலும், கொடுங்கையூரிலும் உள்ள திடக்கழிவுகள் பயோ மைனிங் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன.

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தின் 250 ஏக்கர் ஆகும். இதில்

225 ஏக்கர் பரப்பளவில் திடக்கழிவுகள் கொட்டப்பட்டு வந்தது. இதில் 27.50 இலட்சம் மெட்ரிக் டன் அளவில் திடக்கழிவுகள் உள்ளது என கணக்கிடப்பட்டது. இத்திடக்கழிவுகளை பயோமைனிங் முறையில் அகற்றி நிலத்தினை மீட்டெடுக்க ரூ.350.65 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இதற்காக 6 தொகுப்புகளாக ஒப்பந்தம் வழங்கப்பட்டு, பயோமைனிங் முறையில் திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து அகற்றும் பணிகள் 2022ஆம் ஆண்டு முதல் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதில் 3 தொகுப்புகளில் 15.57 இலட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகளும், இதர 3 தொகுப்புகளில் 9.73 இலட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகளும் என 25.30 இலட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு, 94.29 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இதர திடக்கழிவுகளை பயோமைனிங் முறையில் இந்த ஆண்டு இறுதிக்குள் அகற்றிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பரப்பளவு 342.91 ஏக்கர் ஆகும். இதில் 252 ஏக்கர் பரப்பளவில் திடக்கழிவுகள் கொட்டப்பட்டு வந்தது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி,

ரூபாய் 641 கோடி மதிப்பீட்டில் கொடுங்கையூரில் உள்ள திடக்கழிவுகள் பயோமைனிங் முறையில் பிரித்தெடுத்து அகற்றும் பணி 6 தொகுப்புகளாக ஒப்பந்தம் வழங்கப்பட்டு, கடந்த 2024 ஆம் ஆண்டு முதல் குப்பைகள் பயோமைனிங் முறையில் அகழ்ந்தெடுத்து அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் அகழ்ந்தெடுக்கப்பட வேண்டிய திடக்கழிவுகள் 66.52 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். அதில் இதுவரை 18.03 இலட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகள் பயோமைனிங் முறையில் அகற்றப்பட்டுள்ளது. தொகுப்பு 1 மற்றும் 2ன் வாயிலாக சுமார் 3 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. மீட்டெடுக்கப்பட்ட இந்த நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் வாயிலாக ரூபாய் 57 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுவேலி அமைத்து குழாய் மூலம் நீர்ப்பாசன வசதியுடன் சுமார் 1500 பசுமை மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது .

இவ்வாறாக பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களிலிருந்து இதுவரை 43.33 இலட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகள் பயோமைனிங் முறையில் அகற்றி 97.29 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இப்பகுதிகளில் சுற்றுச்சூழல் மாசுபாடு குறைந்து மக்கள் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்: இதுவரை 3 தவணைகளில், 112 முகாம்கள் நடைபெற்று, 1,48,290 பயனாளிகள் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



சென்னை,செப்.01

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்கள் இன்று (30.08.2025) சென்னை மாநகராட்சி, மணலி மண்டலத்திற்குட்பட்ட எவர்வின் வித்யாஸ்ரம் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமினை பார்வையிட்டு, மாற்றுதிறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழை வழங்கினார். இந்நிகழ்விற்கு பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : - முதலமைச்சர் சென்னை மயிலாப்பூர் சாந்தோம் செயன்பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற ஒரு மகத்தான திட்டத்தை 02.08.2025 அன்று தொடங்கிவைத்தார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்கள் கடந்த 4.5 ஆண்டுகளாக மிக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம்-நம்மை காக்கும் 48, நடப்போம் நலம் பெறுவோம், சிறுநீரகம் பாதுகாப்போம், மக்களை தேடி ஆய்வக திட்டம் தொழிளார்களை தேடி மருத்துவத் திட்டம், இப்படி ஏராளமான திட்டங்கள் இந்த துறையின் சார்பில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் 2 கோடி பயனாளர்களை தாண்டி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும், ஐ.நா. மன்றம் கடந்த ஆண்டுக்கான என்கின்ற ஒரு மகத்தான விருதை மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு தந்துள்ளது.

இன்னுயிர் காப்போம்-நம்மை காக்கும் 48 என்ற மகத்தான திட்டம் இன்றைக்கு இந்திய அளவில் அந்த திட்டத்தை நடத்துவதற்கு ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை நம்மிடம் கேட்டறிந்து அதற்குரிய ஆவணங்களை பெற்று செயல்படுத்த தொடங்கியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் இந்தியாவுக்கு மட்டும் அல்ல உலக அளவில் முன்மாதிரியாக மிக சிறப்பாக செய்து வருகிறார்கள்.

அந்த வகையில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட திட்டம் தான் நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற மகத்தான திட்டம். இத்திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 388 வட்டாரங்களிலும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மூன்று முகாம்கள் என்கின்ற வகையில் மொத்தம் 1164 முகாம்கள், 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் 20 முகாம்கள், 10 இலட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும், பெருநகர சென்னை மாநகராட்சியை பொறுத்தவரை 15 மண்டலங்களுக்கு 15 முகாம்கள் என்கின்ற வகையிலும், 1256 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. அந்த வகையில் இதுவரை 3 வாரங்கள் இம்முகாம்கள் நடைப்பெற்று முடிந்தது. 4வது வாரமாக தமிழ்நாடு முழுவதும் இம்முகாம்கள் இன்று நடத்த தொடங்கியிருக்கிறோம். அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் இம்முகாம்கள் ஒவ்வொரு வாரமும் நடத்தப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த திட்டம் முதல் வாரத்தில் 38 முகாம்கள் நடத்தப்பட்டு 44,795 பயனாளிகள் பயன்பெற்றார்கள். 09.08.2025 அன்று 36 முகாம்கள் நடத்தப்பட்டு 48,418 பயனாளிகள் மருத்துவ பயன் பெற்றார்கள். கடந்த வாரம் 38 முகாம்கள் நடத்தப்பட்டு 55,077 பேர் பயன்பெற்றார்கள். ஆக கடந்த வாரம் வரை நடத்தப்பட்ட மொத்த முகாம்களின் எண்ணிக்கை 112, பயனாளிகளின் எண்ணிக்கை 1,48,290. இந்த நிலையில் இன்றைக்கு 4வது வாரமாக தமிழ்நாடு முழுவதிலும் இந்த முகாம்கள் நடைபெறுகிறது. இம்முகாம்களின் சிறப்பம்சம் என்னவென்றால் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம் காது மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம் மற்றும் பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை போன்ற 17 வகையான சிறப்பு மருத்துவ அமைப்புகள் இதில் பங்கேற்கின்றன.

இதில் இன்னும் கூடுதல் சிறப்பு மாற்று திறனாளிகளை பொறுத்தவரை இன்றைக்கு தமிழ்நாடு முழுவதிலும் இலட்சக்கணக்கானவர்கள் மாற்றுதிறனாளிகளுக்கான எவ்வளவு மாற்றுதிறன் சக்தி உள்ளது என்பது குறித்து அந்த ஆவணங்களை பெற்று அரசின் உதவி தொகையை பெற்று வருகின்றனர். இதில் நிறைய பேருக்கு சான்றிதழ்களை பெறுவதில் சிரமங்கள் உள்ளது. முதலில் வருவாய் துறையின் சான்றிதழ் பெறுவது, பிறகு மருத்துவர்களின் பரிசோதனையில் எவ்வளவு திறன் உள்ளது என்பதை ஆய்ந்தறிவது அதற்கு பின்னர் அவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இப்படி அவர்கள் பல இடங்களுக்கு அலைந்து தான் அந்த மாற்றுதிறனாளிச் சான்றிதழ் பெற முடிகிறது.

இன்நிலையில் முதலமைச்சர் அவர்கள் ஒரு குடையின் கீழ் எல்லாமுமாய் என்கின்ற வகையில் மாற்று திறனாளர்களை ஒரே இடத்திற்கு வரவழைத்து அவர்களின் மாற்றுதிறன் சக்தியை பரிசோதித்து அவர்களுக்கு இங்கேயே சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. மாற்றுதிறனாளிகளின் நிர்வாகத்தின் சார்பாக 14-க்கும் மேற்பட்டவர்களுக்கு அச்சான்றிதழ் இந்த முகாமில் வழங்கப்பட்டுள்ளது. இது மாற்றுத்திறனாளிகளுக்கு மிகப்பெரிய அளவில் மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்று. அவர்களது துயரைத் துடைக்கின்ற ஒரு அற்புதமான காரியம். அது மட்டுமல்லாது, காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கனவே உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு தங்களுடைய அட்டைகள் செல்லுபடியானதா? அது இப்போதும் பயன்படுத்தலாமா? என்கின்ற சந்தேகங்கள் எல்லாம் இருக்கும். அவர்கள் எல்லாம் இந்த முகாமில் வந்து அதை சரிபார்த்துக்கொள்ளலாம். அதோடு மட்டுமல்லாது புதிய குடும்பங்கள் உருவாகிக்கொண்டே இருக்கிறது.

திருமணமாகி இரண்டு, மூன்று பேர் இருக்கிற புதிய புதிய குடும்பங்கள் தொடர்ந்து தினந்தோறும் பல்லாயிரக்கணக்கில் உருவாகி வருகிறது. அவர்களுக்கு உடனடியாக குடும்பத்திற்கான காப்பீட்டுத் திட்ட அட்டைகள் பெறுவதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மட்டும் தான் அந்த வசதி இருக்கிறது. இந்த நிலையில்தான் இந்த அரசு பொருப்பேற்றதற்கு பிறகு பெருநகர சென்னை மாநகராட்சியை பொருத்தவரை நுங்கம்பாக்கம், சைதாப்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் புதிதாக காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்வதற்குரிய வசதிகள் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்றாலும், இதுபோன்ற முகாம்களின் வாயிலாக அந்தந்த மண்டலத்திலேயே காப்பீட்டுத் திட்டத்திற்கான புதிய அட்டைகளை பெறுவதற்கான நடைமுறைகள் எடுக்கப்பட்டு அதுவும் இந்த முகாம்களில் உடனடியாக வழங்கப்படுகிறது. இப்படி பல்வேறு சேவைகள் இந்த முகாம்களின் வாயிலாக தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த முகாம்களை பொறுத்தவரை இன்னுமொரு கூடுதல் சிறப்பு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் அவர்களும் இங்கே அழைத்துவரப்பட்டு, அவர்களுக்கான முழு உடல் பரிசோதனை செய்யப்பட்டு, தேவைக்குரிய சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

இந்த முகாம்களை பொறுத்தவரை முழு உடல் பரிசோதனை என்கின்ற வகையில் ஒருவர் இந்த முகாமிற்கு காலையில் வந்து பரிசோதனை செய்ய தொடங்கினால் அவருக்கு ஒட்டுமொத்தமாக இரத்த மாதிரிகள் எடுத்து அவர்களுடைய நோய் பாதிப்புகள் முழுமையாக கண்டறியப்பட்டு அதற்கான எல்லா பதிசோதனைகளும் செய்யப்பட்டு மாலையில் அவர்களுக்குரிய அந்த ஆவணங்கள் அவர்களிடத்திலே ஒப்படைக்கப்படுகிறது. எனவே பரிசோதனைகள், தீர்வு, தொடர் சிகிச்சைகளுக்காண வழிகாட்டுதல் என்கின்ற வகையில் இந்த முழு உடல் பரிசோதனை திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி இன்றைக்கு மிக சிறப்பான முறையில் மக்களிடத்தில் மிகுந்த ஆதரவை பெற்று வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றார்.

இந்நிகழ்வில் நிலைக்குழுத்தலைவர் (பொதுசுகாதாராம்) மரு.கோ.சாந்தகுமாரி, பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், அலுவலர்கள் மற்றும் முன்னணியினர் பங்கேற்றனர்.



சென்னை ராயபுரம் முத்துமாரியம்மன் கோவிலின் 40 ஆம் ஆண்டு விழாவில் தொகுதி எம்எல்ஏ ஐட்ரீம் மூர்த்தி பங்கேற்று அன்னதானம் வழங்கினார். உடன் திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் நா மனோகரன் , பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ் ஆகியோர் உள்ளனர்

## அண்ணா நகர் பகுதியில் போதை மாத்திரைகள் வைத்திருந்த வழக்கில் மேலும் ஒருவர் கைது

சென்னை செப் 01-

சென்னை பெருநகர காவல், போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் குழுவினர் மற்றும் அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, கடந்த ஜூலை 22 ந் தேதி அன்று மாலை, அண்ணா நகர் டவர் பூங்காவில் கண்காணித்து, அங்கு சட்டவிரோத விற்பனைக்காக போதை மாத்திரைகள் வைத்திருந்த 1.கார்த்திக், 2.முகமது அசாருதின், ஆகிய 2 பேரை கைது செய்து, அவர்களிடமிருந்து என்ற போதை மாத்திரைகள்-8, 2 செல்போன்கள் மற்றும் இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு, இருவரும் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.மேலும், காவல் குழுவினர் மற்றும் அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகளை திருமங்கலம், முகப்பேர், அமைந்தகரை உள்ளிட்ட பல இடங்களில் தேடி வந்த நிலையில், மேற்படி எதிரிகளுக்கு போதை பொருட்களை விநியோகம் செய்த எதிரி அர்ஜூன், வ/27, காசரோடு மாவட்டம், கேரளா என்பவரை நேற்றுமுன் தினம் அண்ணா நகர், காந்தி நகர் மருத்துவமனை அருகே கைது செய்தனர்.

## ஓட்டேரி பகுதியில் மதுபாட்டில்கள் மற்றும் மாவா விற்ற இருவர் கைது

சென்னை செப் 01-

ஓட்டேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் காலை, ஓட்டேரி,கே.எச். ரோடு மற்றும் டேங்க் பந்த் ரோடு சந்திப்பு அருகே, கண்காணித்து, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த 2 பெண்களிடம் விசாரணை செய்தபோது, அவர்கள் சட்ட விரோதமாக மதுபாட்டில்கள் மற்றும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட மாவா புகையிலை பாக்கெட்டுகளை பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், ஓட்டேரி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்ட விரோத விற்பனைக்காக மது பாட்டில்கள் மற்றும் தடை செய்யப்பட்ட மாவா புகையிலை பாக்கெட்டுகள் வைத்திருந்த 1.நாகம்மாள், 2.டில்லி ஆகிய 2 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 15 மதுபாட்டில்கள் மற்றும் 280 கிராம் எடை கொண்ட மாவா புகையிலை பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் ஏற்கனவே மது பாட்டில்கள் விற்பனை செய்தது தொடர்பாக எதிரி நாகம்மாள் மீது 4 குற்ற வழக்குகளும் மற்றொரு எதிரி டில்லி மீது 8 வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

## சங்கர் ஜிவால் விடை பெற்றார்: தமிழ்நாட்டின் டிஜிபியாக(பொ) வெங்கட்ராமன் பதவியேற்பு

சென்னை செப் 01-

தமிழகத்தின் புதிய டிஜிபியாக (பொறுப்பு) வெங்கட்ராமன் நேற்று மதியம் பதவியேற்றார். அவரிடம் அனைத்து பொறுப்புகளையும் ஓய்வு பெற்ற டிஜிபி சங்கர் ஜிவால் ஒப்படைத்தார்.

தமிழ்நாடு காவல்துறை டிஜிபியாக உள்ள சங்கர் ஜிவால் நேற்றுடன் ஓய்வு பெறுகிறார். இதையடுத்து புதிய டிஜிபியாக (பொறுப்பு) வெங்கட்ராமன் நேற்று மதியம் பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு டிஜிபி சங்கர் ஜிவால் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

பின்னர் அனைத்து பொறுப்புகளையும் புதிய டிஜிபி வெங்கட்ராமனிடம் சங்கர் ஜிவால் ஒப்படைத்தார். இந்நிகழ்ச்சியின் போது உயர் காவல் துறை அதிகாரிகள் அனைவரும் உடன் இருந்தனர். ஓய்வு பெற்ற சங்கர் ஜிவால் இந்திய காவல் பணியில் 35 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பாக பணியாற்றினார். இவருக்கு காவல் துறை சார்பில் கடந்த வெள்ளிக்கிழமை பிரிவு உபசார விழா கொண்டாடப்பட்டது.தொடர்ந்து முறையாக ஓய்வு பெறும் நாளான நேற்று , தனது பணியில் இருந்து சங்கர் ஜிவால் ஓய்வு பெறுகிறார். இவரது சிறப்பான பணியால், ஓய்வு பெற்ற இவருக்கு தமிழ்நாடு அரசு சார்பில் தீயணைப்பு ஆணையம் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிதாக பொறுப்பேற்றுள்ள டிஜிபி வெங்கட்ராமன், தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவர் ஆவார். மேலும் தமிழ்நாடு காவல்துறை (தலைமையிடம்) டிஜிபி யாக பணியாற்றிய வினித் தேவ் வான்கடே , தமிழ்நாடு காவலர் குடியிருப்பு மேலாண இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## திருமண ஏக்கத்தில் டாக்டர் தூக்கிட்டு தற்கொலை

சென்னை செப் 01-

திருமண ஏக்கத்தில் டாக்டர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். சென்னை நங்கநல்லூர் 2வது பிரதான சாலை பகுதியை சேர்ந்தவர் ஐடெல் மகிழ்குமாரி.

கடந்தாண்டு இவரது கணவர் உடல்நலக்குறைவால் மரணமடைந்தார். இவரது மூத்த மகன் டாக்டர் சர்ச்சில் பாஸ்லியாட். இவர் நங்கநல்லூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் தோல் சிகிச்சை மருத்துவராக வேலை பார்த்து வந்துள்ளார். இவருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததாக கூறப்படுகிறது.

**தற்கொலை**

இந்த நிலையில், இவருக்கு சில மாதங்களாக ஏராளமான பெண்களை பார்த்தும் எதுவும் அமையவில்லை என்று தெரிகிறது.இந்தநிலையில், நேற்று முன் தினம் மாலை தனது தாயிடம் தனக்கு திருமணம் செய்து வைக்கும்படி டாக்டர் சர்ச்சில் பாஸ்லியாட் வலியுறுத்தி கேட்டுள்ளார். இதன்பின்னர் இரவு படுக்கையறைக்கு சென்ற டாக்டர் மின்விசிறியில் சால்வையால் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதுகுறித்து பழவந்தாங்கல் வழக்குபதிவு செய்து டாக்டரின் சடலத்தை குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

## கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட 8 விளையாட்டு மைதானங்களிலும் மழை நீர் சேமிப்பு

சென்னை ஆக 01-

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஜெர்மன் தொழில்நுட்பத்தில்மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட 8 விளையாட்டு மைதானங்களிலும் நேற்று முன் தினம் நள்ளிரவில் பெய்த கனமழையில், மழைநீர்த் தேக்கமின்றி மழைநீர் முழுவதுமாக சேமிக்கப்பட்டுள்ளது.

**கட்டமைப்பு**

சென்னையில் பருவமழை காலங்களில் ஏற்படும் வெள்ள பாதிப்புகளைத் தடுத்திடும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பல்வேறு திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, ஜெர்மன் தொழில்நுட்பத்தில் மழைநீரைச் சேமிக்கும் திட்டத்தை பெருநகர சென்னை மாநகராட்சி தற்போது செயல்படுத்தி வருகிறது. மழைக் காலங்களில் வெள்ள பாதிப்புகளைத் தடுத்திடும் வகையில், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியில் தேனாம்பேட்டை மண்டலத்தில் (மண்டலம்-9) வார்டு-111ல் மாதிரி பள்ளி சாலை விளையாட்டு மைதானம், வார்டு-123ல் ராஜா அண்ணாமலைபுரம் செயின்ட் மேரி சாலை விளையாட்டு மைதானம், வார்டு-112ல் டிரஸ்ட்புரம் விளையாட்டு மைதானம், கோடம்பாக்கம் மண்டலத்தில் (மண்டலம்-10) வார்டு-135ல் இந்திரா குடியிருப்பு விளையாட்டு மைதானம், வார்டு-133ல் நடேசன் மாநகராட்சி விளையாட்டு மைதானம், வார்டு-140ல் பால்மோர் விளையாட்டு மைதானம், அண்ணா நகர் மண்டலத்தில் (மண்டலம்-8) வார்டு-102ல் செனாய் நகர் கிழக்கு, கிரசென்ட் சாலை விளையாட்டு மைதானம், வார்டு-108ல் மேயர் ராமநாதன் சாலை விளையாட்டு மைதானம் ஆகிய 8 விளையாட்டு மைதானங்களில் தலா 5 லட்சம் லிட்டர் மழைநீர் சேகரிப்புத் தொட்டி கட்டமைப்புகளும், மற்றும் 770 பூங்காக்களில் தலா 3ஆயிரம் லிட்டர் மழைநீர் சேகரிப்புத் தொட்டி கட்டமைப்புகளும் அமைக்கப்பட்டு தேங்கி நிற்கும் மழைநீரை சேமிக்கும் பணிகள் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டது.

**மழைநீர்**

இதன் காரணமாக நேற்று முன் தினம் நள்ளிரவில் கனமழை பெய்த போதும் இந்த 8 விளையாட்டு மைதானங்களிலும் தண்ணீர் தேங்காமல் பெய்த மழைநீர் முழுவதும் இந்த மழைநீர் சேமிப்பு கட்டமைப்பின் வாயிலாக சேகரிக்கப்பட்டு நிலத்தடியில் சேமிக்கப்பட்டது. மேலும், மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட 770 பூங்காக்களிலும் நேற்று முன் தினம் நள்ளிரவில் பெய்த கனமழையால், இப்பூங்காகளில் மழைநீர்த் தேக்கமின்றி இங்கு அமைக்கப்பட்ட மழைநீர் சேமிப்பு கட்டமைப்பின் வாயிலாக நிலத்தடியில் சேமிக்கப்பட்டது.

**பாராட்டு**

மழைநீர் தேங்காமல் இப்பகுதிகளில் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பினை அமைத்து பெருநகர சென்னை மாநகராட்சியின் இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் பெரிதும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

## தி.நகர் பகுதியில் கோயில் தேர் ஊர்வலத்தின் போது மோதல்: 4 பேர் கைது

சென்னை செப் 01-

சென்னை, தி.நகர், தர்மாபுரம் பகுதியில் வசித்து வரும் சின்னகுப்பையா, என்பவர் பிளம்பர் வேலை செய்து வருகிறார். இவர் 30 ந் தேதி அதிகாலை சுமார் 01.00 மணியளளில் வீட்டின் அருகே சென்று கொண்டிருந்த கோயில் தேர் ஊர்வலத்தை பார்த்து கொண்டிருந்த போது, அங்கு பொது கழிப்பிடம் அருகே அதே பகுதியைச் சேர்ந்த வேணு மற்றும் அவரது நண்பர்கள் சிலர் வாத்தியம் அடித்து கொண்டு நடனம் ஆடிக் கொண்டிருந்தபோது, சின்னகுப்பையா அங்கிருந்து நகரும்படி கூறியுள்ளார். உடனே வேணு அவரது நண்பர்களுடன் சேர்ந்து நீ எப்படி எங்களை நகர சொல்லலாம் என கேட்டு தகாத வார்த்தைகளால் பேசி, கீழே கிடந்த கட்டையை எடுத்து சின்னகுப்பையாவை தாக்கி விட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர். இரத்த காயமடைந்த சின்னகுப்பையா கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து கொடுத்த புகாரின்பேரில், சௌந்தர பாண்டியனார் அங்காடி காவல் நிலையத்தில், வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். சௌந்தர பாண்டியனார் அங்காடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட தி.நகர், தர்மாபுரத்தைச் சேர்ந்த 1.வேணு, இவரது தம்பி 2.பிரவீன்குமார், 3.விஷால், 4.கார்த்திக், ஆகிய 4 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் நால்வரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 251 ஆவணி 16
RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017
மதுரை, திங்கள், செப்டம்பர் 01, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**வரி விதிப்பு விவகாரம்: அமெரிக்க அதிபர் டிரம்பின் இந்திய பயணம் திடீர் ரத்து?**

....4-ம் பக்கம்

**இயற்கை பேரிடர்கள் நாட்டை சோதிக்கின்றன: மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி வேதனை**

....9-ம் பக்கம்

**டி20 உலகக் கோப்பை: இந்திய அணியின் ஆலோசகர் ஆகிறாரா எம்.எஸ்.தோனி?**

....6-ம் பக்கம்



## லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கும் 2-ம் சித்திரை திருவிழாவாக அமையும்:

# திருமங்கலம் தொகுதியில் இன்று எடப்பாடியார் எழுச்சி பயணம்

### எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி



மதுரை, செப் 01-

திருமங்கலம் தொகுதியில் இன்று எடப்பாடியார் எழுச்சி பயணப் பயணம் மேற்கொள்கிறார். இதில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கும் இரண்டாம் சித்திரை திருவிழாவாக அமையும் என்று தமிழக எதிர்க்கட்சித் துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

**3-ம் கட்டம் நிறைவு...**

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழ்நாடு முழுவதும் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற பெயரில் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து வருகிறார்.

இதுவரை அவர் 3-ம் கட்ட பிரச்சாரத்தை நிறைவு செய்துள்ளார்.

**4-ம் கட்டமாக....**

இந்நிலையில் அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நான்காம் கட்டமாக இன்று முதல் நான்காம் தேதி வரை மதுரை மாவட்டத்தில் எழுச்சி பயணத்தை மேற்கொள்கிறார்.

இதில் திருமங்கலம் தொகுதியில் உள்ள அம்மா கோவிலில் எழுச்சி உரை ஆற்றுகிறார்.

**60 லட்சம் மக்களை...**

இதனைத் தொடர்ந்து சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் ஆய்வு மேற்கொண்டு செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது- பொதுச்செயளாலர் எடப்பாடியார் கடந்த 7.7.2025 அன்று எழுச்சி பயணத்தை மேற்கொண்டு இதுவரை 118 தொகுதிகளில் 60 லட்சம் மக்களை சந்தித்துள்ளார். 6,728 கிலோ மீட்டர் சாலை மார்க்கமாக பேருந்து மூலம் மக்களை சந்தித்துள்ளார்.

**10 தொகுதிகளில்....**

குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள், தாய்மார்கள் என அனைத்து தர மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து அதை தேர்தல் வாக்குறுதியாக அறிவித்து வருகிறார்.

இதனை தொடர்ந்து நான்காம் கட்ட எழுச்சி பயணமாக இன்று முதல் நான்காம் தேதி வரை மதுரை மாவட்டத்தில 10 தொகுதிகளில் எழச்சி பயணத்தை மேற்கொள்கிறார். இதனைத் தொடர்ந்து மதுரை புறநகர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திருமங்கலம், சோழவந்தான், உசிலம்பட்டி ஆகிய தொகுதிகளில் ஒவ்வொரு கிராமங்களில் வீடு,வீடாக சென்று வாக்கள பெருமக்களுக்கு நேரில் சென்று அழைப்பு கொடுக்கப்பட்டது.

**திருப்பரங்குன்றத்தில்**

நாளை (இன்று) சென்னையில் இருந்து காலை மதுரைக்கு விமானம் மூலம் வருகிறார். மாலை 4 மணிக்கு அறுபடை வீட்டின் முதல் படை வீடான திருப்பரங்குன்றத்தில் எழுச்சி பயணத்தை முடித்துக் கொண்டு மாலை 6 மணிக்கு திருமங்கலத்தில் உள்ள அம்மா கோவிலில் எழுச்சி பயணத்தை மேற்கொள்கிறார். கப்பலூர் டோல்கேட்டில் இருந்து திருமங்கலம் அம்மா கோவில் வரை பொதுமக்கள் எழுச்சி மிகு வரவேற்பு அளிக்கிறார்கள்.

**கலை நிகழ்ச்சியுடன்....**

பெண்கள் பூரண கும்பம் வைத்தும், முளைப்பாரி ஏந்தியும் வரவேற்பு அளிக்கிறார்கள்.அதேபோல இளைஞர்கள், விவசாயிகள் வரவேற்பு அளிக்கிறார்கள். குறிப்பாக கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் போற்றுகின்ற வகையில் பல்வேறு கிராமிய கலை நிகழ்ச்சியுடன் எடப்பாடியாருக்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதனை தொடர்ந்து பல்வேறு திருக்கோவிலில் இருந்து பிரசாதம் வழங்கப்படுகிறது.மேலும் பொதுமக்கள் நிகழ்ச்சியை பார்க்கின்ற வகையில் அகன்ற எல்.இ.டி. திரையரங்கம் மூன்று இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.

**சித்திரை திருவிழா....**

இந்த கூட்டத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்கிறார்கள். குறிப்பாக இன்றைக்கு தி.மு.க. ஆட்சி அவலங்களையும், அ.தி.மு.க. அரசு செய்த சாதனைகளை விளக்கியும், மீண்டும் 2026 ஆண்டில் எடப்பாடியார் ஆட்சிக்கு வந்ததும் மக்களுக்கு செய்ய வேண்டிய தேர்தல் அறிக்கையும் கூறி வருகிறார். மதுரை என்றாலே சித்திரை திருவிழா அந்த சித்திரைத் திருவிழா ஆண்டிற்கு ஒருமுறை வரும்.

**வரலாற்று திருப்பு முனை....**


ஆனால் நாளை (இன்று) திருமங்கலத்தில் நடைபெறும் எடப்பாடியார் எழுச்சி பயணத்தில் லட்சக்கணக்கான மக்கள் திரண்டு மதுரையின் இரண்டாம் சித்திரை திருவிழா என்பது போல் அமையும்.

2026 ஆண்டில் எடப்பாடியார் முதலமைச்சர் வரவேண்டும் என்ற லட்சிய முழக்கத்தோடு லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கும் இந்த எழச்சி பயணம் வரலாற்று திருப்பு முனை ஏற்படுத்தும் வகையில் அமையும்.

இவ்வாறு அவர் கூறினார்.




## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| -270.92 | -74.05 |
| பாயிண்ட் 79,809.65 | பாயிண்ட் 24,426.85 |



**தங்கம்**
1 சவரன் ₹76,960
1 கிராம் ₹9,620



**வெள்ளி**
1 கிலோ ₹134,000
1 கிராம் ₹134.00



**டாலர்** ₹88.15

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### வரி விதிப்பு விவகாரம்:
# அமெரிக்க அதிபர் டிரம்பின் இந்திய பயணம் திடீர் ரத்து?

**வாஷிங்டன், செப். 01-**

குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்தியாவிற்கு டிரம்ப் வருகை தர உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது டிரம்பின் இந்தியப் பயணம் ரத்து செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், பல்வேறு உலக நாடுகளுக்கு பரஸ்பர வரி விதிக்கும் அறிவிப்பை வெளியிட்டார். இதன்படி இந்தியாவுக்கு 25 சதவீத வரியை டிரம்ப் விதித்தார்.

அத்துடன், உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால், கூடுதலாக 25 சதவீத வரியை டிரம்ப் அறிவித்தார்.

அதன்படி, இந்தியாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மொத்தமாக 50 சதவீத வரி விதிக்கப்பட்டது. இந்த வரி விதிப்பு கடந்த 27-ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

இதன் காரணமாக இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்படும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்தியாவிற்கு டிரம்ப் வருகை தர உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது டிரம்பின் இந்தியப் பயணம் ரத்து செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்கா-இந்தியா இடையே வர்த்தகப் பிரச்சனை நீடிப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# டெல்லியில் பறவைக்காய்ச்சல் பரவும் அச்சத்தில் பொதுமக்கள்

**புதுடெல்லி, செப். 01-**

2 நாட்களுக்கு முன்பு 2 வண்ண நாரைகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் பறவைக் காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, மறு அறிவிப்பு வரும் வரை டெல்லி தேசிய விலங்கியல் பூங்கா தற்காலிகமாக மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விலங்கியல் பூங்காவின் இயக்குனர் சஞ்சீத் குமார் கூறுகையில், “இறந்துபோன வண்ண நாரைகளின் மாதிரிகள் கடந்த 27-ந்தேதி போபாலில் உள்ள தேசிய விலங்கு நோய்களுக்கான நிறுவனத்துக்கு பறவைக்காய்ச்சல் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. அந்த 2 மாதிரிகளிலும் ‘எச்.எஸ்.என்.1’ என்கிற பறவைக்காய்ச்சல் வைரஸ் இருப்பது 28-ம் தேதி உறுதி செய்யப்பட்டது.

இது மற்ற விலங்குகள், பறவைகள் மற்றும் பூங்காவின் பாதுகாப்பு ஊழியர்களுக்கு பரவுவதைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் உயிரியல் பாதுகாப்பு நெறிமுறையை வலுப்படுத்துவதற்காக, உயிரியல் பூங்கா ஆகஸ்டு 30-ம் தேதி முதல் மறு உத்தரவு வரும் வரை பார்வையாளர்களுக்கு தற்காலிகமாக மூடப்படும்” என்று அவர் தெரிவித்தார்.

பறவைக்காய்ச்சல் பறவைகளுக்கு மட்டுமின்றி மனிதர்களுக்கும் பரவும் என்பதால், மேற்படி பறவைக்காய்ச்சல் உறுதி தகவல், பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

# காமராஜர் நினைவிடத்தில் நிர்மலா சீதாராமன் மரியாதை

**சென்னை, செப். 01-**

சென்னை கிண்டியில் உள்ள காமராஜர் நினைவிடத்திற்கு சென்ற மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னை வந்தார். விமான நிலையத்தில் அவருக்கு கட்சி நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதன்பின்னர் பா.ஜ.க.வின் புதிய நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

தமிழ் மாநில காங்கிரஸ் நிறுவனர் ஜி.கே. மூப்பனாரின் 24-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னை தேனாம்பேட்டையில் உள்ள மூப்பனார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். மறைந்த முன்னாள் ஆளுநர் இல. கணேசனின் இல்லத்திற்கு சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

மேலும், சென்னை கிண்டியில் உள்ள காமராஜர் நினைவிடத்திற்கு சென்ற மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் தமிழக பா.ஜனதா தலைவர் நயினார் நாகேந்திரன், மாநிலத் துணைத் தலைவர் கரு. நாகராஜன், மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன் ஆகியோரும் பங்கேற்றனர்.

### சீன அதிபரின் பேச்சு:
# அமெரிக்காவுக்கு எச்சரிக்கையா?

**பெய்ஜிங், செப். 01-**

டிராகனும், யானையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற சீன அதிபரின் பேச்சு அமெரிக்காவுக்கு எச்சரிக்கையா என்ற கோணத்தில் பார்க்கப்படுகிறது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்பது சீனா, ரஷ்யா, இந்திய உள்ளிட்ட 10 உறுப்பு நாடுகளை கொண்ட அரசியல், பொருளாதாரம் மற்றும் சர்வதேச பாதுகாப்பு அமைப்பாகும்.

இந்த ஆண்டுக்கான மாநாடு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சீனாவில் உள்ள தியான்ஜின் நகரில் நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி சீனா சென்றுள்ளார்.

தனி விமானம் மூலம் சீனாவில் உள்ள தியான்ஜின் விமான நிலையத்திற்கு சென்ற பிரதமர் மோடிக்கு, சிவப்பு கம்பள வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் மோடியும், சீன அதிபர் ஜின்பிங்கும் சந்தித்து பேசினர். இந்த சந்திப்பின் போது இரு தலைவர்களுக்கும் இடையே இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின்போது பேசிய சீன அதிபர் ஜின்பிங், “சீனாவும், இந்தியாவும் பழம்பெரும் நாகரிகங்களைக் கொண்ட கிழக்கத்திய நாடுகள். உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டு நாடுகள். மேலும் சர்வதேச தெற்கு பிராந்தியத்தின் முக்கிய உறுப்பினர்கள்.

நமது இரு நாட்டு மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துதல், ஒற்றுமை மற்றும் புத்துணர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் மனித சமூகத்தின் முன்னேற்றத்தை ஊக்குவித்தல் ஆகிய வரலாற்றுப் பொறுப்பை நாங்கள் இருவரும் சுமக்கிறோம்.

நாம் சிறந்த அண்டை நாட்டு நட்புறவுகளைக் கொண்ட நண்பர்களாகவும், ஒருவருக்கொருவர் வெற்றியை பெற வைக்கும் கூட்டாளிகளாகவும் இருக்க வேண்டும். டிராகனும், யானையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

சமீபத்தில் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு வரிவிதிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில், இந்திய பிரதமருடனான சந்திப்பின்போது சீன அதிபர் இவ்வாறு பேசியிருப்பது அமெரிக்காவுக்கு அவர் விடுக்கும் மறைமுக எச்சரிக்கையாக பார்க்கப்படுகிறது.

# வைர வியாபாரி மெகுல் ஜாமீன் மனு நிராகரிப்பு

**புதுடெல்லி, செப். 01-**

பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.6,300 கோடி மோசடி செய்த வழக்கில் தொடர்புடைய வைர வியாபாரி மெகுல் சோக்ஷியின் ஜாமீன் மனுவை பெல்ஜியம் நீதிமன்றம் நிராகரித்தது.

மும்பையில் நகை வியாபாரம் செய்த கீதாஞ்சலி குழுமத்தின் உரிமையாளர் மெகுல் சோக்ஷி (66). இவரும் இவரது உறவினர் நீரவ் மோடியும் சேர்ந்து பஞ்சாப் நேஷனல் வங்கி அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்து ரூ.13,000 கோடி அளவுக்கு கடன் பெற்று மோசடி செய்து வெளிநாடு தப்பிச் சென்றனர். இவர்கள் நிதி மோசடி குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டதால், மெகுல் சோக்ஷி பெல்ஜியத்தில் வீட்டுக் காவலிலும், நீரவ் மோடி லண்டன் சிறையிலும் உள்ளனர்.

இவர்கள் வழக்குகளை சந்திப்பதற்காக இந்தியாவிடம் ஒப்படைக்க சிபிஐ வேண்டுகோள் விடுத்தது. இதை எதிர்த்து மெகுல் சோக்ஷி பெல்ஜியம் கசேஷன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஜாமீன் மனு ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர், பெல்ஜியத்தில் உள்ள மேல்முறையீடு நீதிமன்றத்தில் மனு செய்தார்.

ஏற்கெனவே பல வழக்குகளில் இருந்து தப்பிய மெகுல் சோக்ஷிக்கு ஜாமீன் வழங்கினால், அவர் வேறு நாட்டுக்கு தப்பிச் செல்வார் என சிபிஐ தரப்பில் வாதிடப்பட்டது. இதையடுத்து மெகுல் சோக்ஷியின் ஜாமீன் மனுவை, பெல்ஜியத்தின் மேல்முறையீடு மன்றம் நிராகரித்தது.

இதையடுத்து இதையடுத்து மெகுல் சோக் ஷியை இந்தியாவுக் இந்தியாவுக்கு அனுப்புவது தொடர்பான வழக்கு இன்னும் 2 வாரங்களில் பெல்ஜியம் நீதிமன்றத்தில் நடைபெறும்.

# மதுரை அரசு செவிலியர் கல்லூரியில் 50 பி.எஸ்சி. நர்சிங் கூடுதல் இடங்கள்

**மதுரை, செப். 01-**

மதுரை அரசு செவிலியர் கல்லூரியில் பி.எஸ்சி. நர்சிங் படிப்புக்கு கூடுதலாக 50 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன. இந்த ஆண்டிலேயே கலந்தாய்வு மூலம் சேர முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாவட்டங்களில் மிக முக்கிய மருத்துவமனையாக, மதுரை ராஜாஜி அரசு ஆஸ்பத்திரி உள்ளது. இங்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். இதுபோல், ஏராளமானவர்கள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றும் வருகின்றனர். இதன் அருகிலேயே, அரசு மருத்துவ கல்லூரியும், அரசு செவிலியர் கல்லூரியும் செயல்பட்டு வருகிறது. இங்கு ஏராளமான மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இதற்கிடையே, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, மதுரை அரசு மருத்துவ கல்லூரியின் மாணவர் சேர்க்கையானது, 150-ல் இருந்து 250-ஆக உயர்த்தப்பட்டது.

இந்த நிலையில், மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு அதிக அளவில் நோயாளிகள் வந்து செல்வதால், நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பி.எஸ்சி. நர்சிங் மற்றும் எம்.எஸ்சி. நர்சிங் இடங்களை அதிகப்படுத்த வேண்டும் என, 2022-ல் அப்போதைய டீன் ரத்தினவேல், அரசு செவிலியர் கல்லூரி முதல்வர் ராஜாமணி உள்ளிட்டோர் அரசுக்கு கோரிக்கை வைத்தனர். அதனை தொடர்ந்து அந்த ஆண்டே கூடுதலாக 50 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2022-23-ல் அரசாணை வெளியிடப்பட்டது.

ஆனால், அந்த வருடத்தில், தமிழ்நாடு செவிலியர் குழுமம் மாணவர் சேர்க்கைக்கு உரிய அனுமதி கொடுக்கவில்லை என தெரிகிறது. இதனைதொடர்ந்து, தமிழ்நாடு செவிலியர் சங்கத்தின் சார்பில், மதுரை ஐகோர்ட்டில் பி.எஸ்சி. நர்சிங் படிப்பிற்கு கூடுதல் இடங்கள் வழங்கக்கோரி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ந்து, தற்போதைய டீன் அருள் சுந்தரேஷ்குமார், பி.எஸ்சி. நர்சிங் படிப்பிற்கு கூடுதல் இடங்கள் பெறுவதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு செவிலியர் குழுமம், எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தின் சிறப்பு குழு சார்பில் மதுரை செவிலியர் கல்லூரியில் பல்வேறு ஆய்வுகள் நடந்தன. அந்த ஆய்வில் கூடுதல் இருக்கைகள், கட்டிட வசதிகள், போராசிரியர்கள் எண்ணிக்கை உள்ளிட்டவை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

2025-26-ம் கல்வியாண்டில் இருந்து கூடுதலாக 50 பி.எஸ்சி. நர்சிங் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அடுத்த வாரம் நடக்கும் கலந்தாய்வில், மாணவர்கள் மதுரையை தேர்வு செய்து கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

# பணி நிரந்தரம் செய்யக்கோரி பகுதிநேர ஆசிரியர்கள் கூட்டமைப்பு கோரிக்கை

**சென்னை, செப்.01-**

பகுதிநேர ஆசிரியர்களுக்கு கொடுத்த பணி நிரந்தரம் தேர்தல் வாக்குறுதியை முதல்வர் ஸ்டாலின் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற வேண்டும் என தமிழ்நாடு பகுதிநேர ஆசிரியர்கள் கூட்டமைப்பு வலியுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் சி.செந்தில்குமார் கூறியிருப்பதாவது: தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என தேர்தலில் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்து 52 மாதங்கள் முடிந்து விட்டன.

ஆனாலும் பணி நிரந்தரம் வாக்குறுதியை முதல்வர் இன்னும் நிறைவேற்றவே இல்லை. 60 மாதம் கொண்ட சட்டசபையின் ஆட்சி காலம் முடிய இன்னும் சில மாதங்களே உள்ளன. இதிலும் அடுத்த 2026 சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வந்தால் அதன் பின்னர் முதல்வரால் தன்னிச்சையாக எதையுமே செய்ய முடியாது.

எனவே, ஆட்சி அதிகாரம் முதல்வர் ஸ்டாலின் கையில் இருக்கும்போதே போர்க்கால அடிப்படையில் பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். ஏற்கனவே 10 ஆண்டுகள் அதி.மு.க. ஆட்சியிலும், தற்போது 5 ஆண்டுகள் தி.மு.க. ஆட்சியிலும் தொகுப்பூதியத்தில் 15 ஆண்டுகளாக வேலை செய்வதால் 12 ஆயிரம் குடும்பங்கள் வாழ்வாதாரம் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது.

10 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்தவர்களை முதல்வர் பணி நிரந்தரம் செய்து காலமுறை சம்பளம் வழங்காமல், வெறும் 2,500 ரூபாய் சம்பள உயர்வு மட்டுமே பலகட்ட போராட்டங்களுக்கு பின்னர் தான் வழங்கினார் என்பது சமூக நீதி ஆகாது. மே மாதம் சம்பளம், மரணம் அடைந்தால் நிவாரணம், வருங்கால வைப்பு நிதி, மருத்துவ காப்பீடு, போனஸ் உள்பட அரசு சலுகைகள் இல்லாமல் தற்போதைய 12,500 ரூபாய் சொற்ப சம்பளத்தில் இன்றைய விலைவாசியில் அடிப்படை தேவைகளை செய்து கொள்ள முடியவில்லை.

இனியும் படிப்படியாக என சொல்லி முழு நேர வேலை, சம்பள உயர்வு என மீண்டும் தொகுப்பூதியத்தையே தொடராமல் முடிவுக்கு கொண்டுவர வேண்டும். இந்த நீண்ட கால பிரச்சினையில் இருந்து மீள இனி பணி நிரந்தரம் செய்வது மட்டுமே முழு தீர்வு. பணி நிரந்தரம் செய்து விட்டால் முழு நேர வேலை, காலமுறை சம்பளத்துடன் அரசு சலுகைகள் அனைத்துமே கிடைத்து விடும்.

தி.மு.க. தேர்தல் வாக்குறுதியில் சொன்னாலும் முதல்வர் மு.க. ஸ்டாலின் இது வரை பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்யவில்லை என எதிர்க்கட்சிகள் மற்றும் தி.மு.க. கூட்டணி கட்சிகள் அனைத்துமே குற்றஞ் சாட்டி வருகிறார்கள்.

எனவே, தி.மு.க.வின் 2016 மற்றும் 2021 என இரண்டு தேர்தல்களிலும் கொடுத்த வாக்குறுதி என்பதால் முக்கியத்துவம் முன்னுரிமை கொடுத்து முதல்வர் ஸ்டாலின் பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்களுக்கு நிரந்தர வேலை வழங்க அரசு தனியாக சட்டம் கொண்டு வர வேண்டும். இதை அமைச்சரவை கொள்கை முடிவாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்

# உக்ரைன் முன்னாள் சபாநாயகர் சுட்டுக்கொலை

**உக்ரைன், செப். 01-**


உக்ரைன் முன்னாள் சபாநாயகர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

உக்ரைன் பாராளுமன்ற முன்னாள் சபாநாயகர் ஆண்ட்ரி வேலோடிமிரோவிச் பருபிய் (வயது 53). இவர் 2016 முதல் 2019-ம் ஆண்டு வரை சபாநாயகராக செயல்பட்டார். இந்த நிலையில் ஆண்ட்ரி மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். லிவீவ் மாகாணம் பிராங்க்ஸ்வி பகுதியில் ஆண்ட்ரி மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது.

அவரை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டு கொன்று விட்டு தப்பி சென்றனர். அவர்களை போலீசார் தேடி வருகிறார்கள். ஆண்ட்ரி கொலைக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கண்டனம் தெரிவித்து உள்ளார்.

மேலும் கொலையாளிகளை பிடிக்க அனைத்து விசாரணை அமைப்புகளும் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார். ரஷியா-உக்ரைன் இடையேயான போர் நீடித்து வரும் நிலையில் இரு நாடுகளிலும் முக்கிய அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**01-09-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** சுகக் குறைவு ஏற்படலாம். எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது. பெண்களால் வேண்டாத செலவுகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த தனவரவு குறையும்.

**ரிஷபம்:-** பொதுச் சேவையில் ஈடுபடுவீர்கள். சிலருக்குக் குறுகிய கண்ணோட்டம், மற்றும் பொறாமை குணம் ஏற்படும். திருமணமும், தேன்நிலவு ஏற்படும்.

**மிதுனம்:-** எல்லா நலன்களும் உண்டாகும். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இருப்பதால் பயண சுகங்கள் கூடும். எதிரிகள் மறைந்து சத்ரு ஜெயம் உண்டாகும். நண்பர்கள் உதவி நலம் பயக்கும்.

**கடகம்:-** குழந்தைகள் வைத்தியத்துக்கு செலவுகள் கூடும். உங்கள் உழைப்பின் மகத்துவம் பற்றி உயர் அதிகாரிகள் உணராது ஏளனம் செய்வார். பணவிரயம் ஏற்படும். படிப்பில் தடைகள் ஏற்படலாம்.

**சிம்மம்:-** விவசாய வருமானங்கள் எதிர்பார்த்தபடி இருக்காது. குடும்ப வாழ்க்கை கசக்கும். தாயின் உடல் நிலையைக் கவனிக்க வேண்டிய நாள். வாகன பயணங்களில் எச்சரிக்கை தேவை. இடமாற்றம் ஏற்படலாம்.

**கன்னி:-** ஆரோக்கியம் மேம்படும், மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவார். வியாபாரிகளுக்கு அதிக தன லாபம் ஏற்படும். பெண்களால் ஆதாயம் ஏற்படும். புதிய நண்பர்கள் சேர்க்கை உற்சாகம் தரும்.

**துலாம்:-** வருமானங்கள் பெருக வழி இருக்காது. . கல்வியில் சிறு தடைகள் ஏற்படலாம். இனிய பேச்சால், தாய் அல்லது பிற பெண்கள் மூலம் ஆதாயம் அடைவீர்கள்.

**விருச்சிகம்:-** இன்று, பணவரவு, மனதிருப்தி, பாக்கிய விருத்தி ஆகியவை ஏற்படும். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். மணவாழ்வில் இன்பம் பெருகும். இனிய கனவுகள் வரும்.

**தனுசு:-** மருத்துவமனை அல்லது ஒதுக்கப்பட்ட இடங்களில் இருந்து வருமானம் வரும். பண இழப்பு மற்றும் கௌரவக் குறைவுகள் ஏற்படும். கண்மூடித்தனமான காதல் ஏற்படும்.

**மகரம்:-** நம்பத் தகுந்த நண்பர்களின் எண்ணிக்கை கூடினாலும், ஒரு சிலருக்கு மட்டுமே . அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டால் ஆதாயங்கள் பெருகும்.

**கும்பம்:-** பெண்கள் மூலமாக பொதுவாழ்க்கையில் வியாபாரம் அல்லது தொழில் மாற்றங்கள் ஏற்படும். தர்மகாரிய ஈடுபாட்டால் செல்வாக்கு அதிகரிக்கும். பெரியோரை மிகவும் மதிப்பீர்கள்.

**மீனம்:-** சுகமும், பாக்கியமும் விருத்தியாகும். மனதில் உறுதியும், உற்சாகம் பொங்கும். மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும். குழந்தைகள் மீது அன்பு பெருகும்.

### பெருங்குடி குப்பை கிடங்கில்
# திடக்கழிவுகள் அகற்றப்பட்டு 94.29 ஏக்கர் நிலம் மீட்பு: தமிழக அரசு தகவல்

**சென்னை, செப். 01-**

பெருங்குடி குப்பை கிடங்கில் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு 94.29 ஏக்கம் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சராசரியாக நாள் ஒன்றுக்கு 6,300 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. 426 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் வசித்தும், வந்து சென்றும் வருகின்றனர்.

சென்னை மாநகரினை சிங்காரச் சென்னையாக திகழச் செய்திடும் வகையில் சாலைகள், தெருக்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகள், பாலங்கள், பேருந்து நிறுத்தங்கள், மயான பூமிகள் உள்ளிட்ட பொது இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் கட்டடம் மற்றும் கட்டுமானக் கழிவுகள் அகற்றுதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன மண்டலம் 1 முதல் 8 வரையில் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திலும், மண்டலம் 9 முதல் 15 வரை பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் வளாகத்திலும் திடக்கழிவுகள் பல்லாண்டு காலமாக கொட்டப்பட்டு வந்தன. மாநகர் விரிவாக்கம், மக்கள் தொகை அதிகரிப்பு, வணிக செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால், பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய இரண்டு வளாகங்களிலும் குப்பைகள் கொட்டுவது அதிகரித்து, சுற்றுச்சூழல் மாசு ஏற்படும் நிலை உருவானது .

இதனைத் தொடர்ந்து, பெருங்குடியிலும், கொடுங்கையூரிலும் உள்ள திடக்கழிவுகள் பயோ மைனிங் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தின் 250 ஏக்கர் ஆகும். இதில் 225 ஏக்கர் பரப்பளவில் திடக்கழிவுகள் கொட்டப்பட்டு வந்தது. இதில் 27.50 லட்சம் மெட்ரிக் டன் அளவில் திடக்கழிவுகள் உள்ளது என கணக்கிடப்பட்டது. இத்திடக்கழிவுகளை பயோமைனிங் முறையில் அகற்றி நிலத்தினை மீட்டெடுக்க ரூ.350.65 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 6 தொகுப்புகளாக ஒப்பந்தம் வழங்கப்பட்டு, பயோமைனிங் முறையில் திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து அகற்றும் பணிகள் 2022-ம் ஆண்டு முதல் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதில் 3 தொகுப்புகளில் 15.57 லட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகளும், இதர 3 தொகுப்புகளில் 9.73 லட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகளும் என 25.30 இலட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு, 94.29 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இதர திடக்கழிவுகளை பயோமைனிங் முறையில் இந்த ஆண்டு இறுதிக்குள் அகற்றிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பரப்பளவு 342.91 ஏக்கர் ஆகும். இதில் 252 ஏக்கர் பரப்பளவில் திடக்கழிவுகள் கொட்டப்பட்டு வந்தது. ரூபாய் 641 கோடி மதிப்பீட்டில் கொடுங்கையூரில் உள்ள திடக்கழிவுகள் பயோ மைனிங் முறையில் பிரித்தெடுத்து அகற்றும் பணி 6 தொகுப்புகளாக ஒப்பந்தம் வழங்கப்பட்டு, கடந்த 2024-ம் ஆண்டு முதல் குப்பைகள் பயோமைனிங் முறையில் அகழ்ந்தெடுத்து அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் அகழ்ந்தெடுக்கப்பட வேண்டிய திடக்கழிவுகள் 66.52 லட்சம் மெட்ரிக் டன் ஆகும். அதில் இதுவரை 18.03 லட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகள் பயோமைனிங் முறையில் அகற்றப்பட்டுள்ளது. தொகுப்பு 1 மற்றும் 2ன் வாயிலாக சுமார் 3 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. மீட்டெடுக்கப்பட்ட இந்த நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் வாயிலாக ரூபாய் 57 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுவேலி அமைத்து குழாய் மூலம் நீர்ப்பாசன வசதியுடன் சுமார் 1,500 பசுமை மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறாக பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களிலிருந்து இதுவரை 43.33இலட்சம் மெட்ரிக் டன் திடக்கழிவுகள் பயோ மைனிங் முறையில் அகற்றி 97.29 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இப்பகுதிகளில் சுற்றுச்சூழல் மாசுபாடு குறைந்து மக்கள் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மதுரையில் யங் இந்தியன்ஸ் பார்லிமெண்ட் பிராந்திய மட்ட போட்டிகள் தொடக்கம்




**மதுரை, செப் 01-**

மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தலைமையில், யங் இந்தியன்ஸ் பார்லிமெண்ட் மகாத்மா குளோபல் கேட்வே சிபிஎஸ்இ பள்ளியில் சிறப்பாக தொடங்கியது. தமிழகத்தின் 15 ஒய்ஐ சாப்டர்களில் இருந்து சுமார் 170 மாணவர்கள் கலந்து கொண்டு உற்சாகமாக பங்கேற்றனர். இரண்டு நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வில், பாராளுமன்ற நிகழ்வுகளை போன்று மாணவர்கள் உரையாற்றி, விவாதங்களில் ஈடுபடுகின்றனர். பிராந்திய அளவிலான இந்த நிகழ்வில் வெற்றி பெறும் மாணவர்கள் தேசிய மட்ட இறுதிப் போட்டிக்குத் தேர்வு செய்யப்படுவர். இவ்வாறு தேர்வு செய்யப்படும் மாணவர்கள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்களுடன் இணைந்து தேசிய மட்டத்தில் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெறுவர்.

இந்நிகழ்வில் மதுரை எம்.பி. வெங்கடேசன் கூறுகையில், இன்றைய இளைஞர்களே நாளைய இந்தியாவின் தலைவர்கள். மாணவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு தேவையான சமூகப் பொறுப்பு உணர்வும், அரசியல் விழிப்புணர்வும் பெற வேண்டும். அதற்கு இத்தகைய போட்டிகள் பெரிதும் உதவுகின்றன எனக் குறிப்பிட்டார். மேலும் நிகழ்வில் சென்ஹரி லால் (தலைவர், ஒய்ஐ மதுரை), விக்ராந்த் கார்மேகம் (இணைத்தலைவர், ஒய்ஐ மதுரை), தீபக் (நிகழ்ச்சி தலைவர்), பிரிஸில்லா ஜேம்ஸ் (தலைவர், தளிர் மதுரை), திருமகள் (இணைத் தலைவர், தளிர் மதுரை) ஆகியோர் சிறப்பு பங்களிப்பை வழங்கினர். யங் இந்தியன்ஸ் (ஒய்ஐ) அமைப்பின் முக்கிய நோக்கம்.இன்றைய இளைஞர்களை நாளைய பெரிய வீரர்களாக மாற்றுவது என்பதைக் குறிப்பிட்டு, பல கல்வியாளர்கள், தொழில் முனைவோர், சமூக அமைப்புகள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அமேசான் குளோபல் செல்லிங் மூலம் உள்ளூர் வணிகங்கள் தமிழ்நாட்டிலிருந்து உலகம் வரை வளர்ச்சி அடைகின்றன

**கோவை, செப் 01-**

அமேசான் நிறுவனத்தின் மின்வணிக ஏற்றுமதி திட்டமான அமேசான் குளோபல் செல்லிங், இந்தியாவில் இருந்து ஈர்க்கக்கூடிய $13 பில்லியன் மதிப்புள்ள ஒட்டுமொத்த ஏற்றுமதிக்கு பங்களிக்கின்ற வகையில், கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள நகரங்களைச் சேர்ந்த இந்திய சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உலகளாவிய வாடிக்கையாளர்கள் சென்றடைய தொடர்ந்து உதவுகிறது. வீடு, சமையலறை, ஆடை, விளையாட்டு மற்றும் அலங்காரம் போன்ற தொடர்புடைய தயாரிப்புகள் மற்றும் வகைகளின் உள்ளூர் உற்பத்தியாளர்கள் அமேசான் மூலம் புதிய சர்வதேச சந்தைகளைக் கண்டறிந்து வருகின்றனர். சென்னை, கோயம்புத்தூர், மதுரை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கரூர் போன்ற நகரங்களைச் சேர்ந்த 4,500க்கும் மேற்பட்ட ஏற்றுமதியாளர்கள் ஏற்கனவே குளோபல் செல்லிங் ப்ரோக்ராம் மூலம் ஏற்றுமதி செய்து வருகின்றனர். இந்தப் பகுதியில் இ வணிக ஏற்றுமதியின் வளர்ந்து வரும் வேகமானது, 2030 ஆம் ஆண்டுக்குள் அமேசான்களுடைய ஏற்றுமதி உறுதிமொழியை நான்கு மடங்காக அதிகரித்து $80 பில்லியனாக உயர்த்தியுள்ளதை முக்கியப்படுத்திக் காட்டுகிறது. கோயம்புத்தூர் இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு சேப்டர் தலைவர் சுவாமிநாதன் முன்னிலையில் திருப்பூரில் நடைபெறும் இந்த ‘ஏற்றுமதி ஹாட்’ நிகழ்வு, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் அருகிலுள்ள நகரங்களிலிருந்து 300 க்கும் மேற்பட்ட ஏற்றுமதியாளர்களை சென்றடைய நோக்கம் கொண்டுள்ளது. இந்த நிகழ்வில், வணிகங்கள் சர்வதேச அளவில் வளருவதற்கு வழிவகை செய்யப்பட்ட சமீபத்திய தயாரிப்புகள், கருவிகள் மற்றும் வளங்கள் குறித்த தகவல்களை அமேசான் நிறுவன தலைவர்கள் பகிர்ந்து கொள்வார்கள். உள்ளூர் விற்பனையாளர்களுக்கு அவர்களின் உலகளாவிய வணிகப் பயணத்தைத் தொடங்குவதற்கான வழிகாட்டுதல்களையும், நெட்வொர்க்கிங் வாய்ப்புகளையும் இந்த நிகழ்வு வழங்கும். இந்த ஆண்டு, அமேசான் குளோபல் செல்லிங் நடத்தும் ஒரு நாள் 'ஏற்றுமதி ஹாட்' நேரடி நிகழ்வு, மிர்சாபூர்/பதோஹி, மொராதாபாத் மற்றும் பானிபத் உள்ளிட்ட முன்னணி ஏற்றுமதி மண்டலங்களில் இந்தியா முழுவதிலும் நடைபெறுகிறது.அமேசான் குளோபல் செல்லிங் நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீனிதி கல்வபுடி கூறுகையில் இ-காமர்ஸ் ஏற்றுமதி, புவியியல் தடைகளை உடைத்து, முன்னெப்போதும் இல்லாத வாய்ப்புகளை திறக்கின்ற வகையில் இந்திய வணிகங்கள் உலகத்துடன் இணைக்கும் விதத்தை மாற்றியமைக்கின்றது. ஒரு சிறிய நகரத்தின் ஒரு முதல் தலைமுறை விற்பனையாளராக இருந்தாலும் அல்லது ஒரு நன்கு நிறுவப்பட்ட பிராண்டாக இருந்தாலும், இந்த சாத்தியத்தை ஒவ்வொரு இந்திய தொழில்முனைவோருக்கும் எட்டக்கூடியதாக இருப்பதை உறுதி செய்வதே எங்கள் குறிக்கோள் ஆகும். அமேசான் குளோபல் செல்லிங் திட்டம் மூலம், வணிகங்கள் நம்பிக்கையுடன் சர்வதேச அளவில் வளர்வதற்கு அதிகாரமளிக்கிற புதுமையான கருவிகள், ஆழ்ந்த சந்தை நுண்ணறிவுகள் மற்றும் உலகளாவிய வாடிக்கையாளர் அணுகல் ஆகியவற்றை வழங்குவதற்கு நாங்கள் உறுதிப்பாட்டுடன் இருக்கிறோ. உலக வணிகத்தில் ஒரு நம்பகமான பங்காளராக இந்தியாவின் நிலையை வலுப்படுத்துகின்ற அதே வேளையில் இந்தியாவின் தரம், படைப்பாற்றல் மற்றும் கைவினைத் திறனை உலகளாவிய வாடிக்கையாளர்களுக்கு மேலும் பல தொழில்முனைவோரால் காட்டப்படுவதற்கு உதவுவதன் மூலம், 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் இருந்து $80 பில்லியன் மொத்த இ-காமர்ஸ் ஏற்றுமதியை எட்டும் எங்கள் தொலைநோக்கை நோக்கி நாங்கள் உறுதியாக நகர்கின்றோம் என்றார்.

## ஆசிரியர் தினத்தை கொண்டாடும் வகையில்
# மாதம் முழுவதும் ஆசிரியர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் பிரத்யேக சலுகைகள் ஜி ஸ்கொயர் அறிவிப்பு

**மதுரை, செப் 01-**

தென்னிந்தியாவின் மிகப்பெரும் மற்றும் மிகவும் நம்பகமான குடியிருப்பு மற்றும் வணிக நோக்கங்களுக்கான மனைகளின் மேம்பாட்டு பிராண்டான ஜிஸ்கொயர் நம் நாட்டின் எதிர்காலத்தை உன்னதமானதாக வடிவமைக்கும் ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களை கௌரவிக்கும் வகையில் ஆசிரியர்தினம் வரும் மாதம் முழுவதும் சிறப்பு சலுகைகளை அறிவித்துள்ளது. இந்த சிறப்பு சலுகை குறித்துப் பேசிய ஜி ஸ்கொயர் குழுமத்தின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநரான பால ராமஜெயம் இந்த ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, 2025 செப்டம்பர் மாதத்தில் ஜிஸ்கொயரில் வாங்கும் எந்தவொரு குடியிருப்பு அல்லது வணிக மனையையும் முன்பதிவு செய்யும் ஆசிரியர்களுக்கு 5% தள்ளுபடி பிரத்தியேகமாக வழங்கப்படுகிறது. மேலும் ஸ்பாட் ரிஜிஸ்ட்ரேஷன் செய்பவர்களுக்கு Ozotec EV பைக்முற்றிலும் இலவசமாக அளிக்கப்படுகிறது. இந்தச் சலுகையின் மூலம், ஜிஸ்கொயர் ஆசிரியர் தினம் வரும் இந்த செப்டம்பர் மாதத்தில், தனது அனைத்து திட்டங்களிலும் சிறப்பு சலுகைகளை வழங்குவதன் மூலம் ஆசிரியர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்து கொள்கிறது.என்றார். தென்னிந்தியா மூழுவதிலும் ஜிஸ்கொயர் குழுமம் மேற்கொண்டு வரும் வீட்டுமனை மற்றும் வணிகமனை திட்டங்கள் அனைத்திற்கும், ஆசியர் தினசிறப்பு சலுகைகள் பொருந்தும். 2025 செப்டம்பர் 1 முதல் 30, 2025 வரை செய்யப்படும் முன்பதிவுகளுக்கு சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது.

# ஆகாஷ் அந்தே 2025 தொடக்கம்: மாணவர்களுக்கு ரூ.250 கோடி கல்வி உதவித்தொகை, ரூ. 2.5 கோடி பரிசுகள் அறிவிப்பு

**பாண்டிச்சேரி, செப் 01-**

ஆகாஷ் கல்வி சேவை நிறுவனம் (ஏஇஎஸ்எல்) அதன் 16-வது ஆண்டைப் பெற்றதைக் கொண்டாடி, மிகக் குறைந்த கட்டணத்தில் நீட், ஜேஇஇ உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கான சிறந்த பயிற்சி வழங்கும் தேசிய திறன்தேர்வு அந்தே 2025-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. வகுப்பு 5 முதல் 12 வரை மாணவர்களுக்கு 100% வரையிலான கல்வி உதவித்தொகை மற்றும் ரூ.2.5 கோடி மதிப்பிலான பணப் பரிசுகள் வழங்கப்படும்.இந்த ஆண்டுக்கான சிறப்பு அம்சமாக, வகுப்பு 8-12 மாணவர்களுக்கான இன்விக்டஸ் ஏஸ் சோதனை என்ற தேர்வும் அறிமுகமாகிறது. இது ஜேஇஇ அட்வான்ஸ்ட்டு தேர்வுக்கான பள்ளித்திட்ட பயிற்சி மற்றும் தேர்வு தகுதியைப் பரிசீலிக்கும். தேர்வு ஆகஸ்ட் 24, 31 மற்றும் செப்டம்பர் 7-ம் தேதிகளில் ஆன்லைன், ஆஃப்லைன் முறைகளில் நடக்கவுள்ளது.

ஆகாஷ் கல்வி சேவைகள் தலைமை அதிகாரி தீபக் மெஹ்ரோத்ரா கூறுகையில், அந்தே இந்தியா முழுவதும் உள்ள மாணவர்களுக்கு திறனை வெளிக்கொணரும் ஒரு முக்கிய வாய்ப்பாக உள்ளது. அதேபோல், இன்விக்டஸ் ஏஸ் தேர்வு மூலம் ஜேஇஇ அட்வான்ஸ்ட்டு போன்ற தேர்வுகளுக்கான முன்னேற்றமான பயிற்சியை வழங்குகிறோம் எனக்கூறினார். ஏஇஎஸ்எல் கல்வித் துறைத் தலைவர் தீரஜ் குமார் மிஸ்ரா கூறுகையில், நாங்கள் ஒவ்வொரு மாணவரையும் சிந்தனையாளர் மற்றும் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடியவராக வளர்க்க விரும்புகிறோம். கடந்த 16 ஆண்டுகளில், பொருளாதார பின்னணி எனும் தடைகளை கடந்தும் மாணவர்களின் கனவுகளை நனவாக்கும் பணியை அந்தேசெய்துள்ளது என கூறினார்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018.
Phone: 0452- 2668165, 0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

# சென்னையில் விநாயகர் சிலைகள் கரைக்கும் பணி தொடக்கம்

**சென்னை, செப். 01-**

சென்னையில் விநாயகர் சிலைகள் கரைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சென்னையில் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் நேற்று கரைக்கும் பணி தொடங்கி உள்ளது. பட்டினப்பாக்கம், திருவான்மியூர், நீலங்கரை, காசிமேடு, திருவொற்றியூர், புதுவண்ணாரப்பேட்டை, மீன் பிடிதுறைமுகம் ஆகிய இடங்களில் விநாயகர் சிலைகள் கரைக்கப்படுகின்றன. மெரினா கடற்கரையில் மட்டும் 1,565 விநாயகர் சிலைகள் கரைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விநாயகர் சிலைகளின் ஊர்வலத்தைத் தொடர்ந்து சென்னையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளன. சுமார் 16,500 போலீசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஊர்க்காவல் படையினர் 2,000 பேரும் கூடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக சென்னை எழும்பூர் புதுப்பேட்டை, ராயப்பேட்டை, ஐஸ் ஹவுஸ், ஆகிய பல்வேறு முக்கிய இடங்களான இஸ்லாமியர்கள் இருக்கக்கூடிய இடங்களில் மசூதிகளிலும் கிறிஸ்துவ ஆலயங்களிலும் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அடுக்குமாடி குடியிருப்புகளில் மேல் தளத்திலிருந்தும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு உள்ளனர். ஊர்வலமாக விநாயகர் சிலைகள் எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் கிரைன் மூலமாக அவை கடற்கரைகளில் கரைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பட்டினப்பாக்கம்,நீலங்கரை கடற்கரையில் ராட்சத கிரேன் மூலம் விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டு வருகின்றன.

## வத்தலகுண்டு அருகே
# சுற்றுலா வேன்கள் நேருக்கு நேர் மோதியதில் 15 பேர் படுகாயம்

**வத்தலகுண்டு, செப். 01-**

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு பைபாஸ் சாலையில் உள்ள பட்டிவீரன்பட்டி பிரிவில் அதிகாலையில் இரண்டு சுற்றுலா வேன்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டன.

விபத்தில் கரூர், ரங்கமேடு பகுதியில் இருந்து கொடைக்கானலுக்கு சுற்றுலா சென்ற ஒரு வேனும், பெரியகுளத்தில் இருந்து பழனிக்குச் சென்று கொண்டிருந்த மற்றொரு வேனும் இந்த விபத்தில் மோதின. இந்த விபத்தில் மொத்தம் 15 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. கரூர் வேனில் இருந்த 14 பயணிகளும், பெரியகுளம் வேனின் ஒட்டுநரும் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து வத்தலகுண்டு போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜம்மு - காஷ்மீர் வெள்ளம்:
# 12 மணி நேரத்தில் பாலம் கட்டிய ராணுவம்

**ஜம்மு - காஷ்மீர், செப். 01-**

ஜம்மு - காஷ்மீரில் தொடர் மழை பெய்து வரும் நிலையில், வெள்ளத்தால் சேதமடைந்த பாலத்தின் அருகே 110 மீட்டர் நீளமுடைய பாலத்தை 12 மணி நேரத்தில் ராணுவத்தினர் கட்டி முடித்துள்ளனர். தற்போது, ராணுவத்தினர் கட்டிய பெய்லி பாலத்தின் வழியே வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

ஜம்மு - காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் தொடர் கனமழை பெய்து வருகிறது. ஜம்மு - காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்திலுள்ள வாரன் பள்ளத்தாக்கில் கடந்த 27ஆம் தேதி மேக வெடிப்பு நேர்ந்தது. இதேபோன்று, 27ஆம் தேதி ராம்பன் மாவட்டத்தில் நேர்ந்த மேக வெடிப்பால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில், 4 பேர் உயிரிழந்தனர். ஏராளமான வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. ஜம்மு - காஷ்மீரில் ஜம்மு, கதுவா, சாம்பா, பதான்கோட், குருதாஸ்பூர் உள்ளிட்டப் பகுதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் காவல் துறையினருடன் ஹெலிகாப்டர் உதவியோடு ராணுவத்தினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், ஜம்மு நகரில் பாய்ந்து செல்லும் தாவி நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தின் சீற்றத்தால், ரூ.147 கோடியில் கட்டப்பட்ட (இருவழிச் சாலை) பாலத்தின் கிழக்குப் பகுதி அடித்துச்செல்லப்பட்டது. இதனால், அப்பாலத்தின் வழியே போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டது. கடும் மழைக்கு மத்தியிலும் விரைந்து செயல்பட்ட ராணுவத்தினர், சேதமடைந்த பாலதின் அருகே 110 மீட்டர் நீளத்தில் தற்காலிக பெய்லி பாலத்தை அமைத்துள்ளனர். தற்போது அந்த பாலத்தின் வழியே போக்குவரத்து இயக்கம் மீண்டும் தொடங்கியுள்ளது.

பாலத்தின் பாகங்கள் முன்னரே தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு, கட்டுமானப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு விரைவாக ஒன்றிணைக்கப்படுவதே பெய்லி பாலமாகும். இது குறித்து மேஜர் ஜெனரல் முகேஷ் பன்வாலா கூறியதாவது,

"ஜம்முவை இணைக்கும் முக்கிய பாலத்தின் கிழக்குப் பகுதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இதனைச் சரி செய்ய நீண்ட நாள்கள் தேவைப்படும். இதனால், வரையறுக்கப்பட்ட பணியிடத்தில் விரைந்து செயல்பட்ட ராணுவப் பொறியாளர்கள், 12 மணிநேரத்தில் பெய்லி பாலத்தை அமைத்துள்ளனர். நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகன சேவை தற்போது தொடங்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஆக. 26ஆம் தேதி முதல் விமானப் படை ஹெலிகாப்டருடன் ராணுவத்தினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என ஆயிரத்துக்கும் அதிகமானோர் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டுள்ளனர்.

ஜம்மு - ஸ்ரீநகர் இடையேயான முக்கிய சாலையும் சேதமடைந்ததால், ஆப்டிகல் ஃபைபர் கேபிள் அமைக்கப்பட்டு மருந்து, உணவு, பால் மற்றும் நிவாரணப் பொருள்கள் கொண்டுச்செல்லப்படுகின்றன. அங்குள்ள மக்களை ஒருங்கிணைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. எந்தவித இக்கட்டான சூழலிலும் மக்கள் நலனுக்காக ராணுவம் செயல்பட்டு வருகிறது" எனக் குறிப்பிட்டார்.

## அமெரிக்கா 50 சதவீத வரிவிதிப்பு:
# போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை: விஜய் வலியுறுத்தல்



**சென்னை, செப். 01-**

அமெரிக்கா 50 சதவீத வரிவிதிப்பை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க கோரி விஜய் வலியுறுத்தியுள்ளார்.

த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட 50 சதவீத வரிவிதிப்பு நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் தமிழக ஏற்றுமதியாளர்கள் மீள முடியாத அளவிற்கு மிக மிகக் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

தங்கள் எதிர்காலம் குறித்த கேள்விகளோடும் கவலைகளோடும் இருக்கும் நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள், தொழில்முனைவோர் ஒவ்வொருவரோடும் தமிழக வெற்றிக் கழகம் துணை நிற்கும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தியாவின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் பெருமையாகத் தமிழ்நாடு எப்போதும் இருந்து வருகிறது. இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் நமது மாநிலம் கிட்டத்தட்ட 10 சதவீத அளவிற்குப் பங்களிக்கிறது. இது நாட்டின் மிகப்பெரிய ஏற்றுமதி அளவுகளில் ஒன்றாகும். ஜவுளி, ஆடை, தோல் மற்றும் காலணிகள், ஆட்டோமொபைல்கள், ஆட்டோ உதிரி பாகங்கள், இயந்திரங்கள், ரசாயனங்கள், மின்னணுப் பொருட்கள், கடல் உணவு வகைகள், நகைகள் உள்ளிட்டவை வரை தமிழ்நாட்டின் தொழில்கள், லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதோடு, இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியிலும் முக்கியப் பங்காற்றுகின்றன.

இந்நிலையில் இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்காவின் 50 சதவீதம் என்ற புதிய வரி விதிப்பு நடைமுறைக்கு வந்துள்ளதால் தமிழக ஏற்றுமதியாளர்கள், தாங்கள் மேற்கொண்டு வரும் ஏற்றுமதித் தொழிலைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏனெனில், வங்கதேசம் உள்ளிட்ட பிற ஆசிய நாடுகள் மீது அமெரிக்கா இந்த அளவிற்கு வரியை விதிக்கவில்லை. இதனால் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் மற்ற நாட்டுப் பொருட்களின் விலை குறைவாகவும், அதே நேரத்தில் 50 சதவீதம் வரி விதிப்பிற்கு உட்படுத்தப்பட்ட இந்தியப் பொருட்களின் விலை அதிகமாகவும் இருக்கும். வரி அதிகமான காரணத்தினால் அமெரிக்க வணிகர்கள் இந்தியப் பொருட்களை வாங்குவதைத் தவிர்த்து வருகின்றனர். இது தமிழக ஏற்றுமதியாளர்களின் தலையில் விழுந்த மிகப் பெரிய இடி ஆகும்.

இந்த வரி விதிப்பு நடைமுறையால் தமிழகம் முழுவதும் லட்சக்கணக்கான வேலைகள் ஆபத்தில் உள்ளன. திருப்பூரில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகள், கோயம்புத்தூரில் உள்ள ஏற்றுமதி சார்ந்த தொழில் நிறுவனங்கள், ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் உள்ள தோல் தொழிற்சாலைகள் மற்றும் கடல் உணவுகளை ஏற்றுமதி செய்யும் மீனவர்கள் ஆகியோரின் வருமானம் குறையும், தொழிற்சாலைகள் மூடப்பட்டு, நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்புக்கு உள்ளாகும் அபாயத்தில் உள்ளனர். இதனால் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் தமிழ்நாட்டின் இளைஞர்கள், பெண்கள் மற்றும் சிறு தொழில் முனைவோர்தான் முதலில் பாதிக்கப்படுவார்கள்.

இந்தக் கூடுதல் வரி விதிப்பு அச்சுறுத்தல், சிறிது காலமாகவே இருந்து வந்தது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். வெளியுறவுக் கொள்கையில் ஒரு முன்முயற்சி எடுத்திருந்தால் இந்தச் சூழ்நிலையைத் தடுத்திருக்க முடியும் என்ற உணர்வை நாம் ஒவ்வொருவரும் பெறுவதைத் தவிர்க்க இயலவில்லை. உலகளாவிய தெற்கின் குரல்' என்று மத்திய அரசு பெருமையாகக் கூறிக்கொண்டாலும், அமெரிக்காவின் வரிவிதிப்பு நடைமுறைக்கு வந்த உடனே இந்தியத் தொழில்களைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழ்நாட்டை ஆளுகின்ற தி.மு.க அரசும், ஏற்றுமதியாளர்கள் மற்றும் தொழிலாளர்களைப் பாதுகாக்க, எந்த அவசரத் திட்டமோ, நிவாரண நடவடிக்கைகளோ அல்லது தொலைநோக்குப் பார்வையோ இல்லாமல். முதலீட்டு உச்சி மாநாடுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பற்றிய வெற்று விளம்பரங்களோடு தன்னை நிறுத்திக்கொண்டுள்ளது. தூத்துக்குடியில் இருந்து அமெரிக்காவுக்குக் கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்ட கடல் உணவுகள், 50 சதவீத வரி விதிப்பால் பாதி வழியில் தூத்துக்குடிக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக வந்த செய்திகள் கவலை அளிக்கின்றன. ஏனெனில் இதில் பாதிக்கப்படுவது தமிழக ஏற்றுமதியாளர்கள்தான்.

எனவே, தொழில் மற்றும் வேலைவாய்ப்பினைப் பாதுகாப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டியது கட்டாயமாகிறது. ஆகவே. மத்திய, மாநில அரசுகளுக்குத் தமிழக வெற்றிக்கழகம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைக்கிறது. தொழில் துறை தொழில் முனைவோர்கள் மற்றும் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க, விரைவாகவும் தீர்க்கமாகவும் செயல்படக் கூடிய, தொழில் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகளை (குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து) உள்ளடக்கிய மத்திய-மாநில அளவிலான கூட்டுப் பணிக்குழுவை உருவாக்க வேண்டும். வரிவிதிப்புக் காரணமாகச் செலவினங்கள் அதிகரிப்பு மற்றும் கொள்முதல் ஆணைகள் ரத்து போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சிறு, குறு மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்காக மத்திய அரசு ஒரு சிறப்பு ஏற்றுமதி நிலைப்படுத்தல் நிதியை உருவாக்க வேண்டும்.

பாதிப்பிற்கு உள்ளாகும் தொழிலாளர்களையும், நிறுவனங்களையும் பாதுகாக்க, தமிழக அரசு அவர்களின் ஊதியத்திற்கு உத்தரவாதம் தருவது. மானியக் கடன் வழங்குவது போன்ற நிவாரண நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். கடன் வழங்கும் செயல்முறையை எளிதாக்க, பாசல்-3 விதிமுறைகளிலிருந்து நிறுவனங்களை நீக்கி, அதற்கான எளிய வங்கிக் கொள்கையை அறிமுகப்படுத்த வேண்டும். கூடுதல் வரியால் பாதிக்கப்பட்ட துறைகளில் MSME நிறுவனங்கள் பெற்ற கடனில் 5 சதவீத தள்ளுபடி வழங்கும் வகையில் மத்திய அரசு ஒரு பிரத்யேக வட்டி மானியத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் நிலுவையில் உள்ள கடனில் 30 சதவீதம் வரை பிணையமில்லாத கடன்களை அனுமதிக்கும் அவசரக் கடன் உத்தரவாதத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தி அதனை விரிவுபடுத்த வேண்டும்.

வரிவிதிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு அவர்கள் வாங்கியிருக்கும் வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்துவதிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும். வரிவிதிப்பினால் ஏற்பட்டிருக்கும் சுமையை ஈடுசெய்ய, பருத்தி மற்றும் பிற மூலப் பொருள்களின் மீதான இறக்குமதி வரியைத் தற்காலிகமாக ரத்து செய்ய வேண்டும். அமெரிக்காவைத் தவிர பிற நாடுகளுக்கும் சிறு, குறு மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களின் ஏற்றுமதியை அதிகரிக்க ஒரு சிறப்புச் செயல் திட்டத்தை அமல்படுத்துவது குறித்து மத்திய மற்றும் மாநில அரசுகள் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும். ஏற்றுமதியைப் பெருமளவு நம்பியிருக்கும் பல்வேறு துறைகளின் தொழிலாளர்களுக்குத் தற்காலிக நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

அமெரிக்காவிற்கு அப்பால் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்த நிறுவனங்களுக்கு உதவும் வகையில் சிறப்பு நிதித் தொகுப்பினை ஏற்படுத்த வேண்டும். தமிழ்நாட்டின் தொழில்கள் மற்றும் தொழிலாளர்கள் தங்களுக்குத் தகுதியான நீதியையும் பாதுகாப்பையும் பெறும் வரை, தமிழக வெற்றிக் கழகம் ஒவ்வொரு மன்றத்திலும் இடைவிடாமல் போராடும் என்பதை நாங்கள் மீண்டும் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த உலகளாவிய அரசியலால் தமிழகத் தொழில்துறை நசிந்து போய்விடாமல் பாதுகாக்க வேண்டியது மத்திய மற்றும் மாநில அரசுகளின் கடமையாகும். எனவே பொருளாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுத்து, தமிழக ஏற்றுமதியாளர்களையும் ஏற்றுமதி சார்ந்த தொழில்களையும் தொழிலாளர்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் வலியுறுத்துகிறோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

**Name change**

I, SURESH S/o. PALANIAPPAN Passport No:E1011461, Date of Birth 15.05.1974 (native district: Sivagangai), residing at 2/615, Kanjirangal, Kanjirangal Post, Sivagangai District -630561, shell be henceforth known as SURESHKUMAR. SURESH

**காணவில்லை**

கடந்த 14.08.2025ந் தேதி சிவகங்கை பேருந்து நிலையம் அருகே வரும்போது கையெழுத்தில் இருந்த இணை சார்பதிவாளர் எண்1 சிவகங்கை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணம் எண்.301/2006 காணாமல் போய்விட்டது. கண்டுபிடித்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
2/205 பொதிகை நகர்
அண்ணாமலை நகர், சுந்தரனடைப்பு,
சிவகங்கை. செல் எண்9600360981

மாண்புமிகு நீதித்துறை நடுவர்
நீதிமன்றம் எண்.1
சிவகங்கை
Cr.M.P.No. /2025
in
C.C.No.279/2024
த.பிளாசன் தங்கதாஸ்
த/பெ.தங்கதாஸ்
55, காளியம்மன் கோவில் தெரு
தொண்டி ரோடு
சிவகங்கை.
..............மனுதார்/புகார்தாரர்
சங்கர்
த/பெ.ஸ்ரீகண்டன்
G.S கேட்டரிங் சர்வீஸ்
பத்மா கல்யாண மண்டபம்
அருகில்
நெடுவினை சாலை, குமாரபுரம்
கன்னியாகுமரி - 629164
....................எதிரி
அறிவிப்பு
மை வழக்கில் எதிரியாகிய தங்களுக்கு பல முறை சம்மன் அனுப்பியும் அதனை பெறாததால், தின சரி நாளிதழில் விளம்பரம் செய்து இதில் தாங்கள் வருகின்ற 24.09.2025ம் தேதியன்று சமூகம் நீதிமன்றத்தில் அன்று காலை 10.00 மணிக்கு ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் வழக்கும் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.
பு.ஞ.செந்தில்குமார் பி.ஏ.பி.எல்
ஞ.வடிவேல் பிபிஏ.எல்எல்பி
வழக்கறிஞர்கள்,
சிவகங்கை.

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், மேலூர், (இருப்பு
நரசிங்கம்பட்டி மேலூர்)
அ.தி.மு.எண்: 4076/2025/அ.3
R.போஸ்,
S/o. ராசு,
....... மனுதாரர்
54, கார்சேரி ரோடு 2-வது தெரு,
நேரு நகர்
விருதுநகர் மாவட்டம்.
//எதிரிடை //
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மதுரை கிழக்கு வட்டம்
....... எதிர்மனுதாரர்
மனுதார் R.போஸ் என்பவரின் தகப்பனார் ராசு 05.02.1990-ம் தேதியில் மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், பொருசுபட்டி கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை பொருசுபட்டி கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
R.போஸ்
மனுதாரர்

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம் வருவாய்
கோட்டாட்சியர் அலுவலகம்,
மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி
மேலூர்)
அ.தி.மு.எண் : 2253/2025/அ.3
K.முருகப்பெருமாள்,
S/o. கருப்பன்,
..... மனுதாரர்
தனியாமங்கலம் கிராமம்,
மேலூர் வட்டம்.
மதுரை மாவட்டம்.
//எதிரிடை //
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்
மனுதார் K.முருகப்பெருமாள் என்பவரின் தகப்பனார் கருப்பன் 15.03.1997-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், தனியாமங்கலம் கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை தனியாமங்கலம் கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
K.முருகப்பெருமாள்
மனுதாரர்

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், மேலூர், (இருப்பு
நரசிங்கம்பட்டி மேலூர்)
அ.தி.மு.எண்: 4077/2025/அ.3
R.போஸ்,
S/o. ராசு,
....... மனுதாரர்
54, கார்சேரி ரோடு 2-வது தெரு,
நேரு நகர்
விருதுநகர் மாவட்டம்.
//எதிரிடை //
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மதுரை கிழக்கு வட்டம்
....... எதிர்மனுதாரர்
மனுதார் R.போஸ் என்பவரின் தாயார் மீனாட்சி 15.08.2000-ம் தேதியில் மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், பொருசுபட்டி கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை பொருசுபட்டி கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
R.போஸ்
மனுதாரர்

கனம் சார்பு நீதிமன்றம் கோவில்பட்டி
O.S.NO:159/2024.
1 தங்கத்தாய்,
2 சுப்புலட்சுமி,
3 காளிராஜ்,
4 மாரி துரை, -வாதிகள்
எதிர்
1 துர்கா லட்சுமி க/பெ. சிவா ஆனந்த், 39/1, சிமெண்ட் காலனி, திருப்பரங்குன்றம், மதுரை -5,
2 தனலட்சுமி, க/பெ. முத்துக்குமார், 6/8/1, ராம பத்திரன் தெரு, மாகாளியம்மன் கோவில் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை-5.
2 மற்றும் 3ம் பிரதிவாதிகள்
அறிவிப்பு
[illegible]
நீதிமன்ற உத்தரவு படி
K.சத்தியசேகர் M.A.LL.B.
வழக்கறிஞர்,
28/7, வக்கீல் தெரு,
கோவில்பட்டி.

கனம் சார்பு நீதிமன்றம்
கோவில்பட்டி
O.S.NO:20/2024.
1 சீனியம்மாள்,
2 கார்த்திகேயன்,
3 பழனிச்சாமி,
-வாதிகள்
எதிர்
ஜெயலட்சுமி க/பெ. அய்யப்ப ராஜ், உப்பத்தூர் கிராமம், சாத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்.
-14ம் பிரதிவாதி
அறிவிப்பு
[illegible]
நீதிமன்ற உத்தரவு படி
S.விஜயகுமார்,
வழக்கறிஞர்,
ஏ.கே.எஸ். தியேட்டர் ரோடு,
கோவில்பட்டி.

### டி20 உலகக்கோப்பை கிரிக்கெட்:
# இந்திய அணியின் ஆலோசகர் ஆகிறாரா எம்.எஸ்.தோனி?



**மும்பை, செப். 01-**
கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் ஆலோசகராக தோனியை நியமிக்கப்பட உள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கையில் அடுத்த ஆண்டு டி20 உலகக் கோப்பை தொடர் நடைபெறுகிறது. இதில் மொத்தம் 20 அணிகள் விளையாடுகின்றன. தொடரை நடத்தும் அடிப்படையில் நடப்பு சாம்பியன் இந்தியா மற்றும் இலங்கை அணிகள் தானாகவே தகுதி பெற்றன. இந்த தொடரில் வெற்றி பெற்று கோப்பையை தக்கவைக்கும் நோக்கில் இந்திய அணி பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முதல் கட்டமாக சுப்மன் கில்லை இந்திய டி20 அணியின் புதிய துணை கேப்டனாக நியமித்துள்ளது.

இந்நிலையில், டி20 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணியின் ஆலோசகராக முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனியை நியமிக்க பி.சி.சி.ஐ. முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியானது. இதுதொடர்பாக தோனியை பி.சி.சி.ஐ. நிர்வாகம் அணுகியுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனாலும், இதற்கு தோனி என்ன முடிவெடுத்துள்ளார் என்பது குறித்து எந்த தகவலும் இல்லை. ஏற்கனவே, எம்.எஸ்.தோனி 2021-ல் நடந்த டி20 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணியின் ஆலோசகராக செயல்பட்டார். ஆனால் அந்த தொடரில் இந்திய அணி லீக் சுற்றோடு நடையை கட்டியது.

### 50 தங்க பதக்கங்கள் வென்று இந்தியா சாதனை



**ஆ**சிய துப்பாக்கிச்சுடுதல் போட்டியில் 50 தங்க பதக்கங்களை வென்று இந்தியா சாதனை படைத்துள்ளது.

16 ஆவது ஆசிய துப்பாக்கிச்சுடுதல் போட்டி கஜகஸ்தானில் நடைபெற்றது. ஆசிய துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் சிறப்பாக செயல்பட்ட இந்தியா 99 பதக்கங்களை வென்று, முதலிடம் பிடித்து வரலாறு படைத்தது. இந்த 99 பதக்கங்களில் 50 தங்கம், 26 வெள்ளி, 23 வெண்கல பதக்கமும் அடக்கம். கஜகஸ்தான் 21 தங்கம் உள்பட 70 பதக்கங்களை வென்று இரண்டாவது இடத்தையும், சீனா 15 தங்கம் உள்பட 37 பதக்கங்களை வென்று மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.

### அல்காரஸ் 4-வது சுற்றுக்கு தகுதி

**அ**மெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் அல்காரஸ் 4-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3-வது சுற்று ஆட்டம் ஒன்றில்,கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்), இத்தாலியின் லூசியானா டார்டெரியுடன் மோதினார் . பரபரப்பான இந்த ஆட்டத்தில் அல்காரஸ் 6-2, 6-4, 6-0 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றார். இதனால் அவர் 4வது சுற்றுக்கு முன்னேறினார் . அல்காரஸ் இந்த ஆட்டத்தின் போது வலது முழங்காலில் ஏற்பட்ட காயத்துக்கு மைதானத்தில் சிகிச்சை எடுத்தபடி தொடர்ந்து ஆடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகாராஷ்டிர முதல்வர், துணை முதல்வருடன் அமித்ஷா சந்திப்பு

**மும்பை, செப். 01-**
மகாராஷ்டிர முதல்வர் மற்றும் துணை முதல்வருடன் அமித் ஷா சந்தித்து பேசினார்.

விநாயகர் சதுர்த்தி விழாவில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவு மும்பை சென்றார். தெற்கு மும்பையில் உள்ள சகயாத்ரி விருந்தினர் இல்லத்தில் தங்கியிருந்த அவரை துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, மாநில பாஜக தலைவர் ரவீந்திர சவான் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் காலையில் சந்தித்தனர். இதையடுத்து அமித் ஷா, மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸை அவரது இல்லத்தில் சந்தித்தார். விநாயகர் சதுர்த்தி திருவிழாவின்போது மும்பை லால்பாக் பகுதியில் லால்பாக்சா ராஜா பந்தலில் வைக்கப்படும் விநாயகர் சிலை மிகவும் புகழ்பெற்றது. இந்த விநாயகரை மத்திய அமைச்சர் அமித் ஷா நேற்று முன்தினம் தனது குடும்பத்தினருடன் வழிபட்டார். முதல்வர், துணை முதல்வர் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர். மேற்கு பாந்த்ரா மற்றும் கிழக்கு அந்தேரியில் உள்ள விநாயகர் பந்தல்களுக்கும் சென்று அமித் ஷா வழிபட்டார்.

# வாகனங்களுக்கான பேன்சி எண்கள் ஏல முறையில் ஒதுக்கீடு: தமிழக அரசு அறிவிப்பு

**சென்னை, செப். 01-**
வாகனங்களுக்கான பேன்சி எண்களை ஏல முறையில் ஒதுக்கீடு செய்யப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் புதிய வாகனங்களை வாங்குவோர் தங்களுக்கு பிடித்தமான அல்லது அதிர்ஷ்ட எண்கள் கொண்ட நம்பர் பிளேட்களை வாங்க வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் மூலமாக சிறப்பு எண்கள் (பேன்சி எண்) வாங்கி கொள்வர். இதற்கான, முந்தைய நடைமுறையாக ஆர்.டி.ஓ அலுவலகத்தில் தரப்படும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அதனை போக்குவரத்து துறைக்கு அனுப்பி வைத்து தங்களுக்கு தேவையான எண்களை கொண்ட அரசாணை பெறப்பட்ட பின் மீண்டும் வட்டார போக்குவரத்து அதிகாரியின் ஒப்புதலுடன் ரூ.40 ஆயிரம் ஆன்லைன் மூலம் செலுத்தி அந்த சிறப்பு எண்களை பெற்றுக் கொள்ளலாம்.

தற்போது, இந்த நடைமுறையில் புதிய மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி, கேரளா, டெல்லி போன்ற மாநிலங்களை போல தங்களுக்கு விருப்பமான எண்களை தேர்வு செய்ய ஏலம் எடுக்கும் அறிவிப்பை தமிழக அரசு அறிமுகம் செய்துள்ளது. இதுகுறித்து, அதிகாரிகள் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாட்டில் வாகனங்களுக்கான சிறப்பு எண்களை வாங்குவதற்கு ஏல முறை மாற்றப்பட்டுள்ளது. அதிக தேவை உள்ள நம்பர்களுக்கு (எ.கா: 0001, 9999, 7777) இ-பெட்டிங் முறையில் ஏலம் விடப்படும். இதனால், அரசுக்கு கூடுதல் வருமானம் கிடைக்க பெறுவதோடு, முறைகேடுகளையும் தடுக்க முடியும். அந்த வகையில் புதிய நடைமுறையின்படி, சிறப்பு எண்கள் வாங்குவதற்கு நுழைவு கட்டணமாக ரூ.1,000 இருந்த நிலையில் ரூ.2,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஏலத்தில் வெற்றி பெறுவோர் 48 மணி நேரத்திற்குள் பணத்தை கட்ட வேண்டும். அவ்வாறு சிறப்பு எண்கள் தேவைப்படுவோர் போக்குவரத்து துறையின் அதிகாரபூர்வ இணைய பக்கமான www.parivahan.gov.in -என்ற தளத்தில் பயனர் குறியீடு, கடவுச்சொல்லை பயன்படுத்தி உள்நுழைய வேண்டும். அதில், தங்கள் ஆர்.டி.ஓ.வை தேர்ந்தெடுத்து 3 விதமான நம்பர்களில் ஒன்றை தேர்வு செய்யலாம். அதன்படி, சூப்பர் பேன்சி, செமி - பேன்சி மற்றும் ரன்னிங் பேன்சி போன்ற விருப்பங்கள் இடம்பெற்றிருக்கும். அதனை கிளிக் செய்து தங்களுக்கு தேவையான எண்களை பதிவு செய்து கொள்ளலாம்.

வங்கிகள் ஆன்லைனில் சொத்துகளை ஏலம் விடுவது போல இ-பெட்டிங் முறையில் குறிப்பிடப்படும் தேதிகளில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். ஒவ்வொரு எண்ணுக்கும் அரசு ஒரு அடிப்படை விலையை நிர்ணயிக்கும். இது ரூ.2,000 முதல் ரூ.2 லட்சம் வரை இருக்கும். ஏலத்தின் அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும். சிறப்பு எண்களை பெற்றவுடன் அன்றைய தினமே வாகன டீலர்களிடம் தெரிவித்து பேன்சி எண்களை வாகனத்தில் இணைத்துவிட வேண்டும். ஒருவேளை அவ்வாறு இணைக்க தவறினால் ஆன்லைன் சிஸ்டம் தானாகவே ஒரு நம்பரை ஒதுக்கிவிடும். கேரளாவில் கடந்த ஏப்ரல் மாதம் கே.எல்.07.டிஜி.007 என்ற எண் ரூ.45 லட்சத்திற்கு ஏலம் போனது. புதிய நடைமுறையில் ஆட்சேபனை இருந்தால், 30 நாட்களுக்குள் தெரியப்படுத்தலாம். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

### டி-20 லீக் போட்டியில்
# இந்தியா-பாகிஸ்தான் அணிகள்



**பெங்களூரு, செப். 01-**
ஐக்கிய அரபு எமிரேட்சில் ஆசிய கோப்பை 'டி-20' தொடர் (செப். 9-28) நடக்க உள்ளது. இந்தியா, இலங்கை உட்பட 8 அணிகள் பங்கேற்கின்றன. செப். 14ல் நடக்கும் லீக் போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோத உள்ளன. இதற்கான இந்திய அணி துணைக் கேப்டனாக, சுப்மன் கில் நியமிக்கப்பட்டார். தவிர, துலீப் டிராபி தொடரில் வடக்கு மண்டல அணியின் கேப்டனாக களமிறங்க இருந்தார். திடீரென ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக துலீப் டிராபியில் இருந்து விலகினார். இதில் இருந்து மீண்ட சுப்மன், மொகாலியில் 'ஜிம்' பயிற்சியில் ஈடுபட்டார்.

இதனிடையே தொடர்ச்சியான மழை, போதிய பயிற்சி வசதி இல்லாத நிலையில் சுப்மன், உள்ளிட்ட இந்திய அணியின் பல வீரர்கள், பெங்களூரு தேசிய கிரிக்கெட் அகாடமிக்கு முன்னதாக வருகை தந்தனர். இங்கு வழக்கமான பயிற்சிகளில் ஈடுபட உள்ளனர். தவிர ஆசிய கோப்பை தொடரில் பங்கேற்கும் அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா உள்ளிட்ட இந்திய அணியினர் பெங்களூருவில் உள்ளனர். வரும் செப். 4ல் இந்திய அணியினர் துபாய் கிளம்பிச் செல்கின்றனர். மறுநாள் முதல் (செப். 5) பயிற்சியை துவக்குகின்றனர்.

ஐக்கிய அரபு எமிரேட்சில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக, ஆசிய கோப்பை தொடரின் 18 போட்டிகள் அரைமணி நேரம் தாமதமாக, இந்திய நேரப்படி இரவு 8:00 மணிக்கு துவங்கும். எமிரேட்ஸ்-ஓமன் மோதும் ஒரு போட்டி மட்டும் மாலை 5:30க்கு துவங்கும்.

# ஓணம் கொண்டாடிய டெல்லி முதல்வர்



**புதுடெல்லி, செப். 01-**
டெல்லி முதல்வர் ஓணம் கொண்டாடிய கொண்டாடினார்.

நாடு முழுவதும் ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. ஆக. 26 ஆம் தேதி தொடங்கிய ஓணம் கொண்டாட்டம் செப். 5ஆம் தேதியுடன் பிரமாண்டமாக நிறைவடைகிறது. அந்தவகையில், டெல்லி முதல்வர் அலுவலகத்தில் நேற்று ஓணம் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், டெல்லியில் வசித்துவரும் மலையாள குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

அவர்களுடன் முதல்வர் ரேகா குப்தாவும் கலந்துகொண்டு கேரளத்தின் பாரம்பரிய நடனமாடி ஓணம் பண்டிகையை கொண்டாடினார். நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிறகு செய்தியாளர்களுடன் முதல்வர் ரேகா குப்தா பேசியதாவது;-

ஓணம் பண்டிகை கேரளத்தில் மட்டுமல்ல, நாடு முழுவதும், ஏன்? உலகம் முழுவதும் கூட கொண்டாடப்படுகிறது. மலையாள சமூகத்தைச் சேர்ந்தவர்கள் உலகம் முழுக்க உள்ளனர். டெல்லியில் 10 லட்சம் மலையாளக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்களுக்கு ஓணம் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டார்.

# யு.ஏ.இ. அணியை வீழ்த்தி பாகிஸ்தான் 2-வது வெற்றி



**சார்ஜா, செப். 01-**
பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 3 நாடுகள் இடையிலான 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தொடர் சார்ஜாவில் நேற்று முன்தினம் இரவு தொடங்கியது. செப்டம்பர் 7-ந் தேதி வரை நடைபெறும் இந்த போட்டியில் ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டியை எட்டும். இதன் தொடக்க லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இதில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

இதனையடுத்து நேற்று நடந்த 2-வது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி, ஐக்கிய அரபு அமீரகத்துடன் மோதியது. இதில் 'டாஸ்' ஜெயித்து முதலில் பேட் செய்த பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 207 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக சைம் அயூப் 69 ரன்னும், ஹசன் நவாஸ் 56 ரன்னும் எடுத்தனர். ஐக்கிய அரபு அமீரகம் தரப்பில் ஜூனைத் சித்திக், ஜாகிர்கான் தலா 3 விக்கெட்டும், ஹைதர் அலி 2 விக்கெட்டும் வீழ்த்தினார்கள். பின்னர் 208 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய யு.ஏ.இ. அணியில் ஆசிப் கான் தவிர மற்ற வீரர்கள் யாரும் பெரிய அளவில் ரன் குவிக்கவில்லை. இதனால் 20 ஓவர்கள் முழுமையாக விளையாடியும் யு.ஏ.இ. அணியால் 8 விக்கெட்டுகளை இழந்து 176 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதன் மூலம் பாகிஸ்தான் 31 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. யு.ஏ.இ. தரப்பில் ஆசிப் கான் 77 ரன்கள் அடித்தார். பாகிஸ்தான் தரப்பில் ஹசன் அலி 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பாகிஸ்தான் அணி தொடர்ச்சியாக பெற்ற 2-வது வெற்றி இதுவாகும். சைம் அயூப் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

# இந்தியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக தன்னைதானே அறிவித்தார் தேஜஸ்வி யாதவ்

**பீகார், செப். 01-**
இந்தியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக தன்னை தானே தேஜஸ்வி யாதவ் அறிவித்துக்கொண்டார்.

பீகாரில் வாக்காளர்களின் ஓட்டுரிமையை வலியுறுத்தி, வாக்கு திருட்டை கண்டித்து, வாக்காளர் உரிமை' என்ற பெயரில் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடந்த 17- ந் தேதி சாசாராம் பகுதியில் யாத்திரையை தொடங்கினார். செப்டம்பர் 1-ல் தலைநகர் பாட்னாவில் யாத்திரையை முடிக்கிறார். இந்த யாத்திரையில் பீகார் முன்னாள் துணை முதல்-மந்திரியும், ராஷ்டீரிய ஜனதாதள தலைவருமான தேஜஸ்வி யாதவும் ராகுல்காந்தியுடன் கலந்து கொண்டார்.

இந்நிலையில், பீகாரில் இந்தியா கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளராக ஆர்.ஜே.டி. தலைவர் தேஜஸ்வி யாதவ் தன்னிச்சையாக தம்மை அறிவித்தார். வாக்காளர் அதிகார யாத்திரையில் ராகுல்காந்தி மற்றும் அகிலேஷ் யாதவின் முன்னிலையில் தேஜஸ்வி யாதவ் இதனை அறிவித்தார்.

### மருத்துவமனையிலும் தொடர் உண்ணாவிரதம்
# காங்கிரஸ் எம்.பி. சசிகாந்த் செந்தில்

**சென்னை, செப். 01-**
காங்கிரஸ் எம்.பி. சசிகாந்த் செந்தில் மருத்துவமனையில் உண்ணாவிரதம் இருந்தார்.

மத்திய அரசு கல்வித்தொகையை வழங்காததை கண்டித்து திருவள்ளூர் கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள எம்.பி. அலுவலகத்தில் திருவள்ளூர் தொகுதி எம்.பி.சசிகாந்த் செந்தில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார்.

இதில் காங்கிரஸ் கட்சி முன்னாள் மாவட்ட தலைவர் ஏ.ஜி. சிதம்பரம், லயன். டி.ரமேஷ், வக்கீல் சசிகுமார், கலில் ரகுமான், கங்கை குமார், வெங்கடேசன் உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். காலவரையற்ற உண்ணாவிரதம் நேற்று முன்தினம் 2-வது நாளாக தொடர்ந்து நடைபெற்றது. தனது எம்.பி. அலுவலகத்தில் 2-வது நாளாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட சசிகாந்த் செந்தில் எம்.பி. உண்ணாவிரத போராட்டத்திலும் கணினி மூலம் அலுவல்களை கவனித்தார். அவரை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி மாநில செய்தி தொடர்பு துறை தலைவர் கோபண்ணா, பொன்னேரி எம்.எல்.ஏ. துரைசந்திரசேகர் மற்றும் திரளான காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.

இதனையடுத்து போராட்டத்தின்போது திடீரென சசிகாந்த் செந்திலுக்கு ரத்த அழுத்தம் அதிகரித்து உடல் நிலை பாதிக்கப்பட்டது. இதையடுத்து அவர் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நிலையில்,சிகிச்சைக்கு பிறகு உடல்நிலையில் முன்னேற்றம் இருந்தாலும் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தி வருகிறார்கள். ஆனால் சசிகாந்த் செந்தில் அதற்கு மறுப்பு தெரிவித்து, மருத்துவமனையில் இருந்தபடியே உண்ணாவிரதம் போராட்டத்தை தொடர்ந்து வருகிறார்.

### ஜிம்பாப்வேவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டி:
# இலங்கை அணிக்கு அபராதம்



**ஹராரே, செப். 01-**
ஜிம்பாப்வேக்கு சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 2 ஒரு நாள் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடுகிறது. இதன் முதலாவது ஒரு நாள் போட்டி ஹராரே நகரில் நடந்தது. முதலில் பேட் செய்த இலங்கை அணி 6 விக்கெட்டுக்கு 298 ரன்கள் குவித்தது. பதும் நிசாங்கா (76 ரன்), ஜனித் லியானகே (70 ரன்), கமிந்து மென்டிஸ் (57 ரன்) அரைசதம் அடித்தனர்.

அடுத்து களம் இறங்கிய ஜிம்பாப்வே பென் கர்ரன் (70 ரன்), பொறுப்பு கேப்டன் சீன் வில்லியம்ஸ் (57 ரன்) மற்றும் சிகந்தர் ராசா ஆகியோரின் அபாரமான ஆட்டத்தால் இலக்கை நெருங்கியது. கடைசி ஓவரில் அந்த அணியின் வெற்றிக்கு 10 ரன் தேவைப்பட்டது. இறுதி ஓவரை வேகப்பந்து வீச்சாளர் தில்ஷன் மதுஷன்கா வீசினார். அவர் முதல் 3 பந்துகளில் சிகந்தர் ராசா (92 ரன்), பிராட் இவான்ஸ் (0), ரிச்சர்ட் நரவா(0) ஆகியோரது விக்கெட்டுகளை வரிசையாக கபளீகரம் செய்து 'ஹாட்ரிக்' சாதனை படைத்தார். அடுத்த 3 பந்தில் 2 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து வெற்றியை உறுதி செய்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஜிம்பாப்வே 8 விக்கெட்டுக்கு 291 ரன்களே எடுத்தது. இதனால் இலங்கை அணி 7 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இலங்கை தரப்பில் மதுஷன்கா 4 விக்கெட்டும், அசிதா பெர்னாண்டோ 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இந்த போட்டியில் இலங்கை அணி குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்துவீசி முடிக்கவில்லை. இதன் காரணமாக ஐ.சி.சி., இலங்கை அணியின் பிளேயிங் லெவனில் இடம்பெற்றிருந்த வீரர்களுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து தலா 5 சதவீதம் அபராதமாக விதித்துள்ளது.

### அமெரிக்க வரிவிதிப்பை பயன்படுத்தி
# ஈரோட்டில் நூதன மோசடி

**ஈரோடு, செப். 01-**
அமெரிக்க வரிவிதிப்பை பயன்படுத்தி ஈரோட்டில் நூதன மோசடி நடந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், பல்வேறு உலக நாடுகளுக்கு பரஸ்பர வரி விதிக்கும் அறிவிப்பை வெளியிட்டார். இதன்படி இந்தியாவுக்கு 25 சதவீத வரியை டிரம்ப் விதித்தார். அத்துடன், உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால், கூடுதலாக 25 சதவீத வரியை டிரம்ப் அறிவித்தார். அதன்படி, இந்தியாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மொத்தமாக 50 சதவீத வரி விதிக்கப்பட்டது. இந்த வரி விதிப்பு கடந்த 27-ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது. இதன் காரணமாக இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்படும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், அமெரிக்காவின் வரி விதிப்பு காரணமாக ஈரோட்டில் முன்னணி நிறுவனங்களின் ஆடைகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதாக விளம்பரம் செய்து வாடிக்கையாளர்களை ஏமாற்றிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈரோடு மாவட்டம் திண்டலில் உள்ள பிரபல தனியார் ஓட்டலில் பல ஆயிரம் மதிப்புள்ள ஆடைகள், பொருட்கள் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இதனை நம்பி ஏராளமான வாடிக்கையாளர்கள் பொருட்களை வாங்க குவிந்த நிலையில், அங்கு சேதமடைந்த பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதால் ஏமாற்றம் அடைந்தனர். இது குறித்து அங்கிருந்த விற்பனையாளர்களிடம் விசாரித்தபோது, இருதரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

### கனமழை காரணமாக
# சென்னையில் விமான சேவை பாதிப்பு

**சென்னை, செப். 01-**
சென்னையில் கனமழை காரணமாக விமான சேவை பாதிக்கப்பட்டது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, நேற்று மற்றும் இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இந்த சூழலில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நள்ளிரவு கனமழை கொட்டித் தீர்த்தது. சென்டிரல், எழும்பூர், புரசைவாக்கம், வடபழனி, கிண்டி, ஆலந்தூர், கோடம்பாக்கம், போரூர், வளசரவாக்கம், ராமாபுரம், மயிலாப்பூர், சைதாப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் மழை பொழிந்தது. அண்ணா நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இடியுடன் கூடிய மழை வெளுத்து வாங்கியது.

சென்னை மீனம்பாக்கம், வண்டலூர், தாம்பரம், சேலையூர் பகுதிகளிலும் கன மழை கொட்டியது. வட சென்னை பகுதிகளான ராயபுரம், வண்ணரப்பேட்டை, தண்டையார்பேட்டையில் கனமழை வெளுத்து வாங்கியது. வியாசர்பாடி பகுதியில் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. அதிகபட்சமாக மணலியில் 27 செ.மீ, விம்கோநகரில் 23 செ.மீ, கொரட்டூரில் 18 செ.மீ, கத்திவாக்கத்தில் 13 செ.மீ மழை பதிவாகியுள்ளது. இந்த நிலையில், சென்னையில் நள்ளிரவு பெய்த கனமழையால் சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. கோலாலம்பூர், மஸ்கட், துபாய் உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்ல இருந்த 15 விமானங்கள் தாமதமாக புறப்பட்டன. அதைபோல வெளிநாடு மற்றும் வெளியூர்களில் இருந்து சென்னைக்கு வர வேண்டிய 12 விமானங்கள் தாமதமாக வந்தடைந்தன.

ஜெர்மனியில் இருந்து சென்னை வந்த லுப்தான்ஷா ஏர்லைன்ஸ், ஹைதராபாத், மங்களூர், டெல்லியில் இருந்து சென்னை வந்த 4 விமானங்கள் தரையிறங்க முடியாமல் வானில் வட்டமடித்த நிலையில், பெங்களூருவுக்கு திருப்பிவிடப்பட்டன. 8 விமானங்கள் நீண்ட நேரம் வானில் வட்டமடித்து தாமதமாக தரையிறங்கின. விமான சேவை பாதிக்கப்பட்டதால், பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

# குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க அனுமதி

**தென்காசி, செப். 01-**
குற்றாலம் மெயின் அருவியில் 2 நாட்களுக்கு பிறகு சுற்றுலா பயணிகளுக்கு குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது.

தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகள் மற்றும் அதனை ஒட்டி உள்ள பகுதிகளில் பெய்த தொடர் சாரல் மழையின் காரணமாக குற்றால அருவிகளில் கடந்த 2 நாட்களாக நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது.இதனால் குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் ஐந்தருவியிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டன. இந்த நிலையில், மழை குறைந்ததால் இன்று காலை குற்றால அருவிகளில் நீர்வரத்து சீரானது. இதைத்தொடர்ந்து குளிக்க அனுமதி வழங்கப்பட்டது. இதேபோல் ஐந்தருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி இன்று வழங்கப்பட்டது.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 01.09.2025 முதல் 07.09.2025 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் செல்வம் சேரும். உங்கள் அன்பு உறவுகளின் ஆசைகளை நிறைவேற்றும் காலம் இது. எனவே அவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். வழக்கமாக செய்யும் காரியங்கள் வழக்கத்திற்கு மாறாக மாறுபடும் போது மாற்றி யோசித்தால் ஆதாயம் பெருகும். திருமணம் ஆகாதவர்களுக்கு அழகிய மனைவி அமைவாள். தாமதப்படலாம். மகிழ்ச்சியான மணவாழ்க்கை அமையும். பெரியவர்கள் ஆசிகள் கிடைக்கும். மனைவியின் பக்தி மார்க்கம் உங்கள் மத உணர்வைத் தூண்டும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது ஏற்றம் தரும். அரசு ஊழியர்களுக்கு, மற்றவர்களுக்கு கட்டளையிடும் தலைமைப் பதவி கிடைக்கும்.

பரணி --

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். புதிய வீடு, பூமி வாங்கும் முயற்சிகள் வெற்றி பெறும். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். வெள்ளத்தனைய மலர் நீட்டம் போல் உங்கள் உழைப்புக் கேற்ற உயர்வும், முன்னேற்றங்களும் இருக்கும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். பணிபுரியும் பெண்கள் வாகனங்களில் செல்கையில் வேகத்தை குறைத்து கவனமுடன் செல்லுதல் அவசியம். சிலருக்கு அரசு உதவிகள் தாமதமாகும் உயர் அதிகாரிகள் ஆதரவால் பணி உயர்விற்கான பரிந்துரைகள் செய்யப்படலாம்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் சிலரின் கற்பனை வளம் பெருகி, கதை, கவிதை எனத் திறம்பட எழுதிப் புகழ் பெறுவர். பொறாமை காரணமாக நண்பர்களே பகைவராக ஆவர். எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செயல்படாமல் எதையும் ஆலோசித்துச் செயல்படுவது நல்லது. அரசுப் பணியாளர்களுக்கு மனதுக்குப் பிடித்த, புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து கௌரவம் உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்கள் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். சிலர். இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரும். செய்தொழில், வியாபாரம் நன்றாக நடந்து லாபம் பொங்கும். உங்கள் குறிக்கோளை அடைய உண்மையாக உழைத்து உயர்வது நல்லது. மேற்கு, தென்மேற்கு திசையில் பயணங்களைத் தவிர்க்கவும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். அரசுப் பணியில் தங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். வியாபாரிகள் இலாபத்தை அதிகரிக்க புதிய விற்பனை யுக்திகளை கையாளுவீர்கள். எதிர்பாராத தனவரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிலருக்கு உடன் பணிபுரிபவர்கள் மூலம் வேலையில் தொந்தரவுகள் எழலாம்.

ரோகிணி –

இந்த வாரம் குடும்பத்தில் மன மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். பிரயாணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள். சொந்த பந்தங்களுக்கிடையே ஒற்றுமை மேலோங்கும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அலுவலகத்தில் பதவி உயர்வில் பிரச்சனைகள் எழலாம். தொழில் திறன் அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும்.

மிருகசிரீஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். கருத்து வேறுபாடு ஏற்படவண்ணம் இருக்க தகவல் பரிமாற்றத்தின் போது எதையும் நேரிடையாகப் பேசுங்கள். உங்கள் குறிக்கோள்களை அடைய உடல் பலத்தை விட மனோபலம் அவசியம். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். பிள்ளைகளை மூலம் நன்மைகள் ஏற்பட்டாலும், தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, லாபம் எனும் வெற்றிக் கனியைப் பறிப்பார்கள். உடன் பிறப்புகளுடன் சுமுகமாக செல்வது நல்லது.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை- 1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசிரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய சுற்றுலாப் பயணங்களின் மூலம் இன்புறுவீர் கள். நண்பர்களால் பல நன்மைகள் ஏற்படும். வட்டிக்கு ஆசைப்பட்டு வங்கி தவிர பாதுகாப்பற்ற வேறு பொருளாதாரத் திட்டங்களில் சேமிக்காமல் எச்சரிக்கையுடன் இருந்தால் இழப்பைத் தவிர்க்கலாம். இடைவிடாத வேலை பளு காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். அசைவ விரும்பிகளுக்கு அஜீரண தொல்லைகள் எழலாம். பழைய கடன்கள் சுலபமாக வசூலாகும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும்.

திருவாதிரை ---

இந்த வாரம் சகோதர நன்மை, வெற்றி மற்றும் சந்தோஷமும் உண்டாகும். பயிர், மனை இவற்றால் லாபம் ஏற்படும். உங்களுக்குத் தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். கலை மற்றும் உருவாக்கும் தொழிலில் இருப்பவர்களுக்கு அவர்களுக்கு பூரண திருப்தி ஏற்படும் விதமாக மனதில் புதிய எண்ண அலைகள் தோன்றும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். யாத்திரையும், வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படும். குழந்தைகளின் தேர்ச்சி மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கும். சாமர்த்திய சாலியாக விளங்குவார். சிலருக்கு பிரிவும், வீண் செலவுகள் ஏற்படலாம். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இருக்காது. தொழில் மற்றும் வியாபார முதலீடுகளுக்கு வங்கிக் கடன்கள் சுலபமாக கிடைக்கும். அரசின் உதவிகள் கைகொடுக்கும். எதைச் செய்தாலும் சிரத்தையுடன் செய்தால் வெற்றி உண்டு. விவசாயப்பணிகள் சிறப்புற நடந்து ஆதாயம் பெருகும். சிலருக்குத் தாங்கள் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் ஏற்படலாம். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய்வழி உறவுகள் உதவி செய்வார்கள். தொலை தூரப்பயணங்களால் எதிர்பார்த்த நன்மைகள் ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். அரசு அதிகாரிகளால் சிலருக்குத் இடையூறுகள் ஏற்படலாம். வீண் அலைச்சல்கள் ஏற்படும். எனவே, துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். ஆயினும், பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். சிலருக்குக் குழந்தைகள் மூலம் தொல்லை மற்றும் அவமானங்கள் ஏற்படலாம்.

பூசம் --

இந்த வாரம் விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கை ஈடுபாட்டால் செலவுகள் அதிகரிக்கும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன்பிறப்புக்கள் இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். ஞான தன்மை அதிகரிக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு அருந்த முடியாத நிலை ஏற்படும்.

ஆயில்யம் –

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். பொருளாதாரம் என்னும் நட்சத்திரங்கள் வாழ்க்கையெனும் வானில் நிலையாக கண் சிமிட்டிக் கொண்டிருக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் லாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் சம்பந்தமான சிந்தனையுடன் இருப்பார்கள். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள்.

சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத சில பிரச்சனைகள் ஏற்படலாம். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம். கவனம் தேவை.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். அரசு வகையில் கட்ட வேண்டிய வரி பாக்கிகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். . புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும்.

பூரம் –

இந்த வாரம் சுபகாரியங்களுக்கான ஏற்பாடுகள் நடைபெறும். இனிய பயணங்களால் ஆதாயம் மற்றும் மகிழ்ச்சியும் ஏற்படும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சி களும் வெற்றி பெறும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரிய செலவுகள் ஏற்படும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூல பலன்கள் உண்டு. உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்.. புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான ஆதாயம் ஏற்படும். வாக்குவாதத்தால் குடும்பத்தில் பிரச்சனைகள் எழலாம். அனாவசிய செலவுகளை குறைப்பது நல்லது.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுபகாரிய செய்திகள் வரும். செலவுகளும் அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்கு சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

அஸ்தம் –

இந்த வாரம் உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும் அரசு பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் புதிய வீடு மனை வாங்கும் முயற்சிகள் வெற்றி பெரும். அதற்கான வங்கி கடன் உதவிகள் சுலபமாக கிடைக்கும். வீட்டில் திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் மூலம் மகிழ்ச்சி நிலவும். போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் லாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வியாபாரிகளுக்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வியாபார விருத்தி ஏற்படும். அரசுப் பணிபுரிபவர்களுக்கு விருப்பப்படி புதிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கும். தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பெண்களால் லாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் சுறுசுறுப்பாக பணிகளை ஆற்றி நல்ல பெயர் எடுப்பீர்கள். புனித யாத்திரைகளின் மூலம் இன்பம் அதிகரிக்கும். இளைஞர்கள் புதிய வேலைவாய்ப்புக்காக பல இடங்களுக்கு அலைந்து திரிய நேரிடும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும்.

சுவாதி –

இந்த வாரம் விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் தங்கள் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்வர். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். அரசு பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். அவர்களின் அன்பு மற்றும் ஆதரவால் இடமாற்றங்கள் நினைத்தபடி கிடைக்கும். சிலருக்கு சோதனைகள் பல வந்தாலும் அதை சாதனையாக்கி வெற்றி பெறுவார். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் மூலம் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலமாக இருக்கும்.. அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள்.

அனுஷம் –

இந்த வாரம் உங்களுக்கு ஓரளவு பணவரவு இருக்கும். சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றஞ்சாட்டப்பட்டு அவதிப்பட நேரும்.

கேட்டை –

இந்த வாரம் ஆதாயம் பெருகும். பணவரவு மற்றும் உத்யோக லாபம் ஏற்படும். பெண்களால் முன்னேற்றம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். காரியங்கள் அனைத்தும் வெற்றி பெறும். வியாபாரிகள் புதிய முதலீடுகளை செய்வது நலம் பயக்கும். சுகமான பயணங்களால் இன்பம் பெருகும். ஞானம் பெருகும். பணியில் உள்ளவர்களுக்கு நிலுவைத் தொகைகள் வந்து சேரும். கணவன்மார்களின் உதவியால் வாழ்க்கையில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொன்நகை, புதிய ஆடை சேர்க்கை உண்டு. சிலருக்கு வீண் பழி, பகை ஏற்படலாம். பணிபுரியும் பெண்கள் உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் உங்களுக்கு மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். ஆதாயம் அதிகரிக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும்.

பூராடம் –

இந்த வாரம் புது தெம்பும், உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் மறைந்து களிப்பு உண்டாகும். கணவன் மனைவியிடையே அன்பும் பாசமும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராக இருக்கும். குழந்தைகள் வகையில் சுபச் செலவுகள் ஏற்படும். சுயதொழில் புரியும் பெண்களுக்கு எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளை இடும் அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4- பாதங்கள், திருவோ ணம்- 1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். பெரிய மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தி திறன் குறையும் வாய்ப்பு ஏற்படலாம்.

திருவோணம் -

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அரசுப் பணி புரியம் பெண்களுக்கு உயர் அதிகாரிகளால் நெருக்கடி ஏற்படும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் லாபம் தரும்.

சதயம்-

இந்த வாரம் மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்த படி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுஜன தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

உத்திரட்டாதி-

இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் லாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

ரேவதி-

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.. சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

# ஒட்டன்சத்திரத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணியினை அமைச்சர் அர. சக்கரபாணி நேரில் ஆய்வு செய்தார்



**ஒட்டன்சத்திரம்.செப்.01**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சி நிர்வாகம் சார்பில் கட்டப்பட்டு வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுப்பணியை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேரில் ஆய்வு செய்து பணிகளை விரைவில் முடிக்க உத்தரவிட்டார். முன்னதாக புதிதாக திறக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு காய்கறி மார்க்கெட்டில் அடிப்படை வசதிகள் செய்வதற்கான பணிகளையும் ஆய்வு செய்தார். நிகழ்வில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் முருகேசன், ஆணையாளர் ஸ்வேதா, நகர்மன்ற தலைவர் திருமலைச்சாமி,ஒன்றிய செயலாளர் எஸ். ஆர். கே. பாலு, செயற்குழு உறுப்பினர் கண்ணன், பொறியாளர்சுப்ரமணிய பிரபு, வருவாய் ஆய்வாளர் விஜய்பால்ராஜ்,சுகாதார ஆய்வாளர் ராஜமோகன், முன்னாள் நகர்மன்ற உ றுப்பினர் பாண்டியராஜன், அரசு ஒப்பந்தாரர் வேலுச்சாமி உள்ளிட்ட நகராட்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# குறவன்குளம் கிராமத்தில் காளியம்மன் கோவில் மண்டலாபிஷேக விழா



**வாடிப்பட்டி, செப் 01-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே குறவன்குளம் கிராமத்தில் வடக்கு தெருவில் அமைந்திருக்கும் தேவேந்திர குல வேளாளர் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீகாளியம்மன், விநாயகர், முருகன், கருப்பண்ணசாமி கோவில்களின் மஹா கும்பாபிஷேக விழா கடந்த மாதம் நடைபெற்றது. இதை தொடர்ந்து 48 வது நாள் மண்டல பூஜை விழா நடந்தது. இதில் யாக சாலையில் இருந்து வேத மந்திரங்கள் முழங்க சுவாமிகளுக்கு அர்ச்சனைகளும் 16 வகையான திரவியங்களால் அபிஷேகமும் நடந்தது. இதில் சுற்று வட்டாரங்களைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த விழா ஏற்பாடுகளை குறவன்குளம் தேவேந்திரகுல உறவின்முறை சங்கம் வடக்கு தெரு கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# அம்பிளிக்கை அருட்திரு ஜேக்கப் நினைவு கிறிஸ்துவ கல்லூரியில் 23-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது



**ஒட்டன்சத்திரம்,செப் 01-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அம்பிளிக்கை அருட்திரு ஜேக்கப் நினைவு கிறிஸ்த்துவ கல்லூரியில் 23 ஆவது பட்டமளிப்பு விழா கல்லூரியின் செயலாளர் நிர்மலா ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் பினித் முத்துகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக மதுரை காமராசர் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் எஸ். முத்தையா மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி பேசினார். முன்னதாக மாணவர்கள் சந்திப்பு நடைபெற்றது.விழாவினை கல்லூரியின் நிர்வாக அலுவலர் ஜெயபாரதி ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

# திருமங்கலத்தில் நடைபெற்ற மாபெரும் சிலம்பாட்ட போட்டி: 400 மாணவ - மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்பு




**திருமங்கலம், செப் 01-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் நடைபெற்ற 5-ம் ஆண்டு மாபெரும் சிலம்பாட்ட போட்டியில் 400 க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தி சிலம்பத்தை சுழற்றி பரிசுகளை தட்டிச் சென்றனர். திருமங்கலம் நகர் விமான நிலைய சாலையில் உள்ள பாலகுரு கமலாதேவி திருமண மண்டபத்தில் திருமங்கலம் லீ சாம்பியன் மார்ஷியல் ஆர்ட்ஸ் மற்றும் இந்தியன் சிலம்ப பள்ளி சார்பில் பள்ளி கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான 5ம் ஆண்டு மாபெரும் சிலம்பப் போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டியில் பல்வேறு பகுதிகளிலிருந்து 6 வயது முதல் 18 வயது வரையிலான பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் 400 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த சிலம்ப போட்டிக்கு உலக சோட்டோ கான் கராத்தே அமைப்பின் தமிழ்நாடு செயலாளரும், திருமங்கலம் லீ சாம்பியன் மார்ஷியல் ஆர்ட்ஸ் நிறுவனர் கராத்தே ஜி.பால்பாண்டி தலைமை வகித்தார். தமிழ்நாடு துணைத் தலைவர் பி.அவணமுத்து, மேலூர் போதி தர்மா மார்ஷியல் ஆர்ட்ஸ் நிறுவனர் செந்தில் (எ) போஜராஜன் ஆகியோர் வரவேற்றனர். திருமங்கலம் ஏ.எஸ்.பி. அன்சுல் நாகர்,மதுரை இந்தியன் சிலம்ப பள்ளி நிறுவனர் மாமல்லன் எஸ்.எம்.மணி, சோழன் உலக சாதனை புத்தக நிறுவனர் நீலமேகம் நிமலன், மதுரை ஜி.ஆர். மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி நிறுவனர் எஸ்.கணேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு போட்டியினை துவக்கி வைத்தனர்.இதனை தொடர்ந்து நடைபெற்ற ஒற்றை கம்பு, இரட்டை கம்பு, சுருள்வாள் மற்றும் தொடுமுறை போட்டிகளில் மாணவ , மாணவியர் ஆர்வமுடன் பங்கேற்று தங்களது முழு திறமைகளை வெளிப்படுத்தி சிலம்பம் சுழற்றினர். போட்டியின் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் சிறப்பு விருந்தினர்களால் பரிசாக வழங்கப்பட்டது. சிலம்ப ஆசான்கள் பயிற்சியாளர்கள் ஏராளமானோர் பங்கேற்ற இந்த மாபெரும் சிலம்ப போட்டியினை நவாஸ்செரிப், விக்னேசன், சுபாஷ், ஹரிஹரன், காயத்ரி ஆகியோர் சிறப்புடன் ஒருங்கிணைத்து வழி நடத்தினர். போட்டியின் நிறைவாக உலக சோட்டோ கான் கராத்தே அமைப்பின் தமிழ்நாடு பொருளாளர் டி.விக்னேஷ்வரன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## ஹாஸ்பிடாலிட்டி ஹாரைசன் விருதுகள் 2025: பேக்கிங் மற்றும் இனிப்பகத் துறையின் சிறந்தவர்களுக்கு பாராட்டு

**சென்னை, செப் 01-**

மும்பை, அந்தேரி கிழக்கில் உள்ள நோவோடெல் ஏர்போர்ட் ஹோட்டலில் நடைபெற்ற ரிச் வழங்கும் ஹாஸ்பிடாலிட்டி ஹாரைசன் பேக்கரி, பேட்டிஸெரி & சாக்லேட் விருதுகள் 2025 நிகழ்வானது, பேக்கிங் துறையின் தரம், திறமை மற்றும் புதுமைகளை கொண்டாடும் மாபெரும் விழாவாக இருந்தது.இந்த நிகழ்வை ரிச் புராடக்ட்ஸ் நிறுவனம் வழங்க, ஹாஸ்பிடாலிட்டி ஹாரைசன் இதழ் மிகுந்த விமரிசையாக ஏற்பாடு செய்திருந்தது.ரிச் புராடக்ட்ஸ் இந்தியா, எம்இஎன்ஏ & துருக்கி நிர்வாக இயக்குநர் பங்கஜ் சதுர்வேதி கூறுகையில், இந்தியாவின் பேக்கிங் துறையில் உள்ள அபாரமான திறமை மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடும் இவ்விழா, எங்களின் எதிர்கால நம்பிக்கைக்கு அத்தியாவசியமான ஒன்று எனக் கூறினார்.இந்த நிகழ்வில் செஃப் அஜய் சோப்ரா, ராகீ வாஸ்வானி, வினேஷ் ஜானி, சஞ்சனா படேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்தியாவின் சிறந்த 10 செயின் பேக்கரிகள் மற்றும் சிறந்த 10 தனித்தியங்கும் பேக்கரிகள் விருதுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.மேற்கு மண்டலத்தில் ரிப்பன்ஸ் & பலூன்ஸ், ஹேங்கவுட், ஓ கேக்ஸ் ஆகியவை இடம்பெற்றன. வடக்கு மண்டலத்தில் பிரவுன் சுகர், மேக்சிம், டொனால்ட் பேஸ்ட்ரி ஷாப் உள்ளிட்டவை விருதுகளுக்கு தகுதியடைந்தன. தெற்கு மண்டலத்தைச் சேர்ந்த ஜஸ்ட் பேக்ஸ், சுவிஸ் கேசில், கஃபே நிலோஃபர், கேக் ஸ்கொயர் போன்றவை விருது பெற்றன.கிழக்கு மண்டலத்தில் கோ கூல், டான்ப்ரோ, க்ரீம்ஸ் உள்ளிட்டவை சிறப்பாகத் தேர்வானது.தரம், புதுமை மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தில் முன்னேறிய பிராண்டுகள் விருதுகளுக்கு தகுதி பெற்றன.சாக்லேட், பேட்டிஸெரி, காஃபே மற்றும் ஹோம்மேட் பிராண்டுகளின் திறமையை இந்த விழா வெகுவாகக் கௌரவித்தது.இந்த விழாவின் மூலம் தொழில் துறையினர் பல தரப்பிலும் இணைந்து கருத்துக்களைப் பகிர்ந்தனர்.இந்த நிகழ்வின் வெற்றி, ரிச் புராடக்ட்ஸ் மற்றும் ஹாஸ்பிடாலிட்டி ஹாரைசன் ஆகியோரின் தீவிர முயற்சியை பிரதிபலித்தது.இந்த விருதுகள், இந்திய பேக்கிங் துறையின் வளர்ச்சிக்கும், நவீன முயற்சிகளுக்கும் வழிகாட்டியாக அமையும் என்பது உறுதி.

## சிந்தி சர்வதேச பள்ளி, கோவை நீரிழிவு நோய் சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் மருத்துவமனை, ரோட்டரி சாய் சிட்டி கிளப் சார்பில் மெகா உடல்நல பரிசோதனை முகாம்

**கோவை, செப் 01-**

சிந்தி சர்வதேச பள்ளி, கோவை ராம் நகரில் உள்ள கோவை நீரிழிவு நோய் சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் மருத்துவமனை மற்றும் ரோட்டரி கிளப் ஆப் கோயம்புத்தூர் சாய் சிட்டி இணைந்து பல்துறை சிறப்பு மெகா உடல்நல பரிசோதனை முகாமை கோவை தடாகம் சாலையில் உள்ள சிந்தி சர்வதேச பள்ளியில் காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடத்தியது. இதுகுறித்து கோவை நீரிழிவு நோய் சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் மருத்துவமனையின் தலைவரும் சர்க்கரை நோய் சிறப்பு மருத்துவருமான டாக்டர் ஆர் பால முருகன் கூறுகையில், கோவை சிந்தி சர்வதேச பள்ளியில் இன்று நடைபெற்ற இந்த பல்துறை பரிசோதனை முகாமில் கோவையில் உள்ள பிரபல மருத்துவமனைகள் கலந்து கொண்டனர். குறிப்பாக கோவை நீரழிவு நோய் சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் மருத்துவமனை, ராயல் கேர் மருத்துவமனை, பொன்னம்மாள் கண் மருத்துவமனை, பிரேம் பல் மருத்துவமனை மற்றும் இசை ஸ்பீச் அண்ட் ஹேரிங் கேர் சென்டர் இணைந்து இந்த முகாமை நடத்தியது. இதில் பள்ளி மாணவ மாணவியர், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் என சுமார் 800 முதல் 1000 நபர்கள் வரை கலந்து கொண்டு பயனடைந்தார்கள் என்றார்.

இந்த முகாமில் குழந்தைகளுக்கு கண் காது பல் போன்ற பரிசோதனைகளும், பெரியவர்களுக்கு சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், கண், இருதயம் போன்ற பரிசோதனைகளும் செய்யப்பட்டன.மேலும் காலை நடைபெற்ற கருத்தரங்கில் உடல் நலத்தை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு சொற்பொழிவும் நடைபெற்றது.

உணவியல் நிபுணர்கள் மூலம் மாணவர்களுக்கு உணவு முறை ஆலோசனை வழங்கப்பட்டது.பிசியோதெரபிஸ்ட் உடற்பயிற்சி குறித்து விழிப்புணர்வு அளித்தார்கள். சுகாதாரம் குறித்த சிறப்பு விழிப்புணர்வு அமர்வு பெண் மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் தாய்மார்களுக்கு மகளிர் மருத்துவ நிபுணரால் நடத்தப்பட்டது.

இந்த முகாமிற்கு பள்ளி தாளாளரும் கமலேஷ் வி ரகேஜா, முதல்வர் பாக்கியலட்சுமி ஸ்ரீனிவாசன் மற்றும் சாய் சிட்டி ரோட்டரி கிளப் தலைவர் ரொட்டேரியன் ஹால்துறை ஆகியோர் கலந்து கொண்டனர்.இந்த முகாமிற்கான ஏற்பாடுகளை கோவை நீரிழிவு நோய் சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் மருத்துவமனை நிறுவனத்தினர் செய்திருந்தார்கள்.

## குஜராத்தில் இந்தியாவின் முதல் முழுமையான ஓஎஸ்ஏடி வசதிகளில் ஒன்றை சிஜி செமி அறிமுகப்படுத்துகிறது

**சென்னை, செப் 01-**

குஜராத்தின் சனந்தில் இந்தியாவின் முதல் முழுமையான அவுட்சோர்ஸ் செய்யப்பட்ட குறைக்கடத்தி அசெம்பிளி மற்றும் டெஸ்ட் வசதிகளில் ஒன்றை சிஜி செமி பிரைவேட் லிமிடெட் அறிமுகப்படுத்தியுள்ளது,சனந்த் இல் நடைபெற்ற சிஜி செமி பிரைவேட் லிமிட்டட், நிறுவன பைலட் ப்ரோடக்ஷன் வசதியின் தொடக்கவிழாவானது, இந்தியாவின் செமிகண்டக்டர் உற்பத்திப்பிரிவின் முன்னேற்றப்பாதையில் குறிபிடத்தக்க அளவிலான மாபெரும் பாய்ச்சலை அடையாளப்படுத்துகிறது. எதிர்வரும் செமிகான் இந்தியா 2025 மெகா நிகழ்விற்கு சற்று முன்னதாக வரும் இந்த மைல் கல்சாதனையானது உயர் தொழில்நுட்ப உற்பத்திபிரிவில் தரவரையறை அளவுகளை நிறைவு செய்து வழங்குவதற்கான இந்தியாவின் செயல்திறனை குறிப்பிட்டவகையில் வெளிப்படுத்துகிறது.

சிஜி பவர், ரெனேசாஸ் எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் மற்றும் ஸ்டார்ஸ் மைக்ரோ எலக்ட்ரானிக்ஸ் நிறுவனங்களுக்கிடையேயான இந்த கூட்டாண்மை, உலகளாவிய அளவில் நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்ப நிபுணத்துவத்தை, ஆற்றல் மிக்க உள்ளூர் திறன்களோடு ஒன்றிணைத்து, செமிகண்டக்டர் உற்பத்திப் பிரிவில் ஒரு வலிமையான மதிப்புக் கூட்டுத் தொடருக்கான அடித்தளத்தை நிறுவியுள்ளது அடுத்து அது அறிமுகப்படுத்தவிருக்கும். ஓஎஸ்ஏடிவசதி தானியங்கி வாகனம், நுகர்வோர் பிரிவு, தொழில்துறை மற்றும் தகவல் தொடர்புத் துறை பயன்பாடுகளுக்கு ஆதரவளித்து மேம்படுத்துவதோடு, உள்நாட்டு உற்பத்தி பிரிவில் மதிப்புக் கூட்டு செயல்பாடுகளுக்கு வலுவூட்டுவதிலும், தேவை-வழங்கல்களுக்கு இடையேயான இணைப்புகளை ஒத்திசைந்து இயங்கச்செய்வதிலும் சிஜி செமி ஒரு முக்கிய பங்கு வகிக்கும். உலகளாவிய அளவில் செமிகண்டக்டர் உற்பத்திப் பிரிவில் இந்தியாவின் மேம்பட்ட நிலை மற்றும் தொழில்நுட்ப பிரிவில் தன்னிறைவு பெற்ற பாரத தேசத்தை நோக்கிய நமது தொடர்ந்த பயணத்தை மீண்டும் வலியுறுத்தி நிலைநாட்டிய இந்த மாபெரும் சாதனையை நிகழ்த்திய எங்கள் உறுப்பினர், ரெனேசாஸ் மற்றும் சிஜி பவர் மற்றும் கூட்டாளிகளை நாங்கள் வாழ்த்துகிறோம் என்று செமி இந்தியா மற்றும் ஐஇஎஸ்ஏ நிறுவனத்தின் சிஇஓ அசோக் சந்தக் கூறினார்.

## நத்தத்தில் கால பைரவர் கோவில்களில் வளர்பிறை அஷ்டமி வழிபாடு

**நத்தம், செப் 01-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டூர் உண்ணாமுலை அம்பாள் உடனுறை அண்ணாமலையார் கோவிலில் அமைந்துள்ள காலபைரவர் கோவிலில் வளர்பிறை அஷ்டமியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது.

இதையொட்டி சுவாமிக்கு பால், பழம், இளநீர், சந்தனம், திருமஞ்சனம், பன்னீர் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.

இதில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து விளக்கேற்றி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கபட்டது. இதைப்போலவே கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள கால பைரவர் சன்னதியில் வளர்பிறை அஷ்டமியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது.

இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# மேலூரில் கலைஞரின் 102-வது பிறந்தநாள் விழா: அமைச்சர் மூர்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



**மேலூர், செப் 01-**

திராவிட இயக்கத்தின் முன்னாள் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு மேலூர் ஒன்றிய பகுதியில் உள்ள அ.வலையப்பட்டி, புலிப்பட்டி, அரிட்டாபட்டி, கல்லம்பட்டி, சூரக்குண்டு ஆகிய கிராமங்களில் குடும்ப அட்டை வைத்துள்ள அனைவருக்கும் தி.மு.க. சார்பில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மேலூர் தொகுதி பொறுப்பாளர் வ.து.ந.ஆனந்த், ஆணையூர் பகுதி செயலாளர் மருதுபாண்டியன், மேலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் வ.ரெகுபதி,மேலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மேலூர் நகர்மன்ற தலைவர் முகமது யாசின், மேலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திர பிரபு, மேலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் இளங்கண்ணன், கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜராஜன், கொட்டாம்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் கேசம்பட்டி ராஜா, கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் பழனி, கொட்டாம்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் பாலசுப்பிரமணியன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் நாவினிபட்டி வேலாயுதம், முன்னாள் யூனியன் சேர்மன் அழகுபாண்டி, மேலூர் மேற்கு தி.மு.க. ஒன்றிய பொருளாளர் முத்துபொருள், மாவட்ட அமைப்பு சாரா ஒட்டுனர் அணி செயலாளர் தற்காகுடி சரவணன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மாலைமுத்தன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் அ.வலையபட்டி தீபா தங்கம், கிடாரிபட்டி ஹேமலதா மதிவாணன், அம்பலகாரன்பட்டி லெட்சுமி ராமையா, கொட்டகுடி அஜிதா சரவணன், பேரூராட்சி துணை தலைவர் கலைவாணன், மாவட்ட அமைப்பு சாரா ஒட்டுநர் அணி துணை அமைப்பாளர் அட்டப்பட்டி குமார், அரிட்டாபட்டி மோகன், மாவட்ட ஐடிவிங் துணை அமைப்பாளர் சந்தோஷ், மற்றும் வசந்த், சசிகுமார், சந்திரன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




**கேசிஜி தொழில்நுட்ப கல்லூரி, அதன் வருடாந்திர அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சியான என்ஜீனியஸ்25-ன் நிறைவு விழாவில், சென்னையை சுற்றியுள்ள 31 பள்ளிகளிலிருந்து 2753 மாணவர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் டிஓய்எஸ்எல் சிடி-ன் இயக்குநர் மனிஷ் பிரதாப் சிங் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்டனர். கல்லூரியின் இயக்குநர் டாக்டர் ஆனி ஜேக்கப், முதல்வர் டாக்டர் முத்துக்கண்ணன் உடனிருந்தனர்.**

# கோட்டைமேடு கிராமத்தில் மதுரை டியூக் லயன்ஸ் சங்கத்தின் சார்பில் இலவச மருத்துவ முகாம்



**அலங்காநல்லூர். செப்.01.**

மதுரை டியூக் லயன்ஸ் சங்கம் சார்பில் அலங்காநல்லூர் அருகிலுள்ள கோட்டைமேடு கிராமத்தில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமும், சமூகப் பணிகளும் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

மருத்துவ சேவைகள் குரு மருத்துவமனை மூச்சுத் திணறல், நீரிழிவு உடல் பரிசோதனை செய்தனர் ஹர்ஷிணி மருத்துவமனை காது, மூக்கு, தொண்டை பரிசோதனை மற்றும் ப்ரீதிகா கண் மருத்துவமனை கண் பார்வை பரிசோதனை கண் நோய் கண்டறிதல் பொதுமக்களுக்கு இலவச ஆலோசனைகள் மற்றும் பரிசோதனைகள் வழங்கப்பட்டன.

தாய்ப்பால் விழிப்புணர்வு பாலவைஷ்ணவி, அவர்கள் தாய்ப்பால் குழந்தையின் ஆரோக்கியமான எதிர்காலத்தின் அடித்தளம் என வலியுறுத்தி உரையாற்றினார். கல்வி உதவி .மணியஞ்சி அரசு தொடக்கப் பள்ளி ஆசிரியருக்காக மேசை மற்றும் நாற்காலி வழங்கினர். இதை தலைவர் சிவராமன் (தக்ஷா குழும நிறுவனங்கள்) அவர்கள் வழங்கினார்.

பெற்றோர் இல்லாத 3 சிறுமிகளின் முழு கல்விச்செலவையும் தாம் மேற்கொள்ளுவதாக ஜெயமுருகன் (நிழல் டிரஸ்ட் & குரு மருத்துவமனை) அவர்கள் உறுதியளித்தார். மாற்றுத்திறனாளி சிறுமிக்கு சைக்கிள்தனியாகச் செல்ல முடியாத சிறுமிக்கு மூன்று சக்கரச் சைக்கிள் வழங்கப்பட்டது. இதற்கான நிதியுதவியை பாலா வைஷ்ணவி (ஸ்ரீ வெல்மெடிக்கல்ஸ்) அவர்கள் செய்துள்ளார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நிகழ்ச்சி தலைவர் சிவராமன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

ஒருங்கிணைப்பு பாலவைஷ்ணவி அவர்கள் மேற்கொண்டார்.மேலும், லியோ லைஃப் டிரஸ்ட் தலைவர் ரமேஷ்,மற்றும் கோட்டைமேடு பாலாஜி, ராஜ்குமார், ஆகியோர் இணைந்து,நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். பங்கேற்பாளர்கள் பட்டயத் தலைவர். இலங்கோவன், பொருளாளர் கார்த்திகேயன், உறுப்பினர் மஹாலிங்கம், கணேசன்ஆகியோர் கலந்து கொண்டனர். இம்முகாமில் சுற்றுவட்டார பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.


தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### இயற்கை பேரிடர்கள் நாட்டை சோதிக்கின்றன:

## மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி வேதனை

புதுடெல்லி, செப். 01-

பிரதமர் மோடி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை மனதின் குரல் (மன் கீ பாத்) நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களிடம் வானொலியில் உரையாற்றி வருகிறார். 125-வது நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:-



இந்த மழைக்காலத்தில் இயற்கை பேரிடர்கள் நாட்டை சோதிக்கின்றன. கடந்த சில வாரங்களாக வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் ஏற்பட்ட பேரழிவுகளை நாம் பார்த்தோம். வீடுகள் இடிந்து விழுந்தன, வயல்கள் நீரில் மூழ்கின, குடும்பங்களும் அழிந்தன.

இடைவிடாத வெள்ளத்தால் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டன. சாலைகள் துண்டிக்கப்பட்டன, மக்களின் உயிர்கள் ஆபத்தில் இருந்தன. இந்த சம்பவங்கள் ஒவ்வொரு இந்தியரையும் வருத்தத்தில் ஆழ்த்தின. பேரழிவுகள் வேதனையை அளித்தது.

மீட்பு நடவடிக்கையின் போது தேசிய பேரிடர் பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, பாதுகாப்புப் படையினரின் முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

எங்கெல்லாம் நெருக்கடி ஏற்பட்டதோ, அங்கெல்லாம் பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் பிற பாதுகாப்புப் படையினர் மக்களைக் காப்பாற்ற இரவும், பகலும் உழைத்தனர். வீரர்கள் தொழில்நுட்பத்தின் உதவியைப் பெற்றனர். நேரடி கண்டுபிடிப்பாளர்கள், மோப்ப நாய்கள், டிரோன் கண்காணிப்பு ஆகியவற்றின் உதவியுடன் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஹெலிகாப்டர்கள் மூலம் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. பேரிடர் காலங்களில் ஆயுதப் படைகள் உதவின. உள்ளூர் மக்கள், சமூக சேவையாளர்கள், டாக்டர்கள், நிர்வாகம் இந்த நெருக்கடியான நேரத்தில் அனைவரும் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டனர். இந்த கடினமான காலங்களில் மனித குலத்திற்கு முன்னுரிமை அளித்த ஒவ்வொரு குடிமகனுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

புல்வாமாவில் ஒரு மைதானத்தில் சாதனை எண்ணிக்கையிலான மக்கள் கூடினர். முதல் பகல்-இரவு கிரிக்கெட் போட்டி அங்கு நடைபெற்றது. இது முன்பு அங்கு சாத்தியமற்றது. ஆனால் இப்போது நாடு மாறிக்கொண்டு இருக்கிறது என்று பேசினார்.

### இந்தியாவில் சிறப்பாக செயல்படும் முதல்வர்:

## தொடர்ந்து முதலிடத்தில் உ.பி. முதல்வர் ஆதித்யநாத்

புதுடெல்லி, செப். 01-

இந்தியாவில் சிறப்பாகச் செயலாற்றும் முதல்வர் யார் என்று இந்தியா டுடே நாளிதழ் இந்த மாதம் [ஆகஸ்ட்] நடத்திய கருத்துக்கணிப்பு முடிவுகள் தற்போது வெளியாகி உள்ளது. இதில் உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் முதலிடத்தில் உள்ளார்.

நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் உள்ள 2,06,826 பேரிடம் இந்த கருத்துக்கணிப்பானது நடத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 36 சதவீதம் பேர் உத்தர பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்தை சிறப்பாகச் செயல்படும் முதல்வராக கருதுகின்றனர். உ.பி. முதல்வர் கடந்த பிப்ரவரியில் 35 சதவீத ஆதரவு பெற்று இருந்தார். தற்போது ஒரு சதவீதம் அதிகரித்து 36 சதவீதம் பெற்றுள்ளார்.

2வது இடம் பிடித்துள்ள மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜியின் செயல்பாடுகளை 13 சதவீதம் பேர் விரும்புகின்றனர். அவரைத் தொடர்ந்து 7 சதவீதம் பேர் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு சிறந்த முறையில் செயல்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

## எம்.எல்.ஏ. ஓய்வூதியத்துக்கு விண்ணப்பம் செய்த தன்கர்

ஜெய்ப்பூர், செப். 01-

ராஜினாமா ஏற்படுத்திய பரபரப்புக்கு இடையே எம்.எல்.ஏ. ஓய்வூதியத்துக்கு ஜெகதீப் தன்கர் விண்ணப்பம் செய்துள்ளார்.

இந்தியாவின் துணை ஜனாதிபதியாக இருந்தவர் ஜெகதீப் தன்கர். ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த அவர், அந்த மாநிலத்தில் உள்ள கிஷன்கர் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ.வாக, கடந்த 1993-ம் ஆண்டு முதல் 1998-ம் ஆண்டு வரை பதவி வகித்தார். இதற்காக அவர் 2019-ம் ஆண்டு ஜூலை வரை ஓய்வூதியம் பெற்று வந்தார்

அதன் பிறகு அவர் மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். இதையடுதது எம்.எல்.ஏ. ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது. 2022-ம் ஆண்டு இந்தியாவின் துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர் தேர்வு செய்யப்பட்டார். நாடாளுமன்ற மாநிலங்களவை தலைவராக இருந்த அவர் மீது, உரிய நேரம் தர மறுப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றசாட்டு வைத்தன.

ஆனால் திடீரென்று கடந்த ஜூலை 21-ந் தேதி ஜெகதீப் தன்கர், தனது உடல்நிலையை காரணம் காட்டி துணை ஜனாதிபதி பதவியில் இருந்து ராஜினாமா செய்தார். இதற்கு பின்னணியில் பா.ஜனதாவின் அழுத்தம் இருந்ததாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

இதற்கிடையே ஜெகதீப் தன்கர், தனக்கு முன்னாள் எம்.எல்.ஏ.வுக்கான ஓய்வூதியத்தை மீண்டும் கேட்டு, ராஜஸ்தான் அரசிடம் விண்ணப்பித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ராஜஸ்தானில் ஒரு முன்னாள் எம்.எல்.ஏ.வின் ஓய்வூதியம் ஒரு மாதத்திற்கு ரூ.35 ஆயிரத்தில் இருந்து தொடங்குகிறது, 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 20 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

தற்போது 74 வயதாகும் ஜெகதீப் தன்கருக்கு மாதம் ரூ.42 ஆயிரம் ஓய்வூதியம் கிடைக்கும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பு விவகாரம்:

## ஏற்றுமதியை ஊக்குவிக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

### பிரதமர் மோடிக்கு இ.பி.எஸ். கடிதம்

சென்னை, செப். 01-

அமெரிக்காவின் தற்போதைய கூடுதல் வரி விதிப்பால் நம் நாட்டில் பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியாளர்களுக்கு எந்த வித இடையூறும் ஏற்படாத வகையில், மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு அதி.மு.க. சார்பில் அண்மையில் கடிதம் எழுதியுள்ளேன் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தி.மு.க.வின் தோல்வி மாடல் ஆட்சியில், தமிழ்நாடு கெட்டுக் குட்டிச் சுவரானதை மறைக்க, எதற்கெடுத்தாலும் மத்திய அரசு மீது முதல்வர் மு.க. ஸ்டாலின் பழிபோடுகிறார் என்று அதி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்க அரசு தற்போது உயர்த்தியுள்ள இறக்குமதி வரியால் பாதிப்படைந்துள்ள திருப்பூர் பின்னலாடைத் தொழிலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள் என்று பிரதமருக்கு, மு.க. ஸ்டாலின் அவரது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

365 கிலோ பருத்தி விலை 50 சதவீதத்திற்கும் கீழே குறைந்தபோதும், நூல் விலையில் ஸ்திரமற்ற தன்மை நிலவிய போதும், எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது. பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்க துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை.

வெளிநாட்டு சுற்றுப் பயணம் நான்கு முறை மேற்கொண்டும், கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இயங்கும் ஜவுளித் தொழிலுக்கு எந்தவிதமான வெளிநாட்டு முதலீடுகளையும் ஈர்க்காது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில், குறிப்பாக கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் ஸ்பின்னிங் மில்கள், ஓப்பன் எண்ட் ஸ்பின்னிங் மில்கள் அதிக அளவில் உள்ளன. இந்த மில்கள் தமிழக மக்களுக்கு மட்டுமின்றி, பல லட்சக்கணக்கான வட மாநில மக்களுக்கும் அதிக அளவில் வேலை வாய்ப்புகளை வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதாரமாக விளங்கி வருகின்றன.

தொழில் முனைவோர்களையும், தொழிற்சாலைகளையும் முடக்கும் வகையில், தமிழக அரசு, திறனற்ற வகையில் செயல்பட்டதன் காரணமாக தொழில் துறை ஏற்கெனவே நலிவடைந்து ஸ்தம்பித்துள்ளது.

இதன் காரணமாக, தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோயம்புத்தூரிலும், பின்னலாடை நகரம் மற்றும் டாலர் சிட்டி என்று அழைக்கப்படும் திருப்பூரிலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளும், வியாபாரங்களும் மெதுவாக தமிழகத்தை விட்டு ஏற்கெனவே 2022 முதல் வெளியேறத் துவங்கி விட்டன.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 2021, கொரோனா காலத்தில்கூட சிறப்பாக நடைபெற்று வந்த ஜவுளி மற்றும் பின்னலாடைத் தொழில்கள், தற்போதைய ஆட்சியில், கடுமையான வரி உயர்வு மற்றும் தொழில் கொள்கையால் தள்ளாடி வருகிறது.

அமெரிக்காவின் தற்போதைய கூடுதல் வரி விதிப்பால் நம் நாட்டில் பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியாளர்களுக்கு எந்த வித இடையூறும் ஏற்படாத வகையில், மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு அதி.மு.க. சார்பில் அண்மையில் கடிதம் எழுதியுள்ளேன்.

மேலும், அக்கடிதத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும், தொழில் துறைக்கு நிவாரணம் அளிக்க கடன் மற்றும் அதற்கான வட்டியினை 6 மாதங்களுக்கு நிறுத்தி வைக்கவும் மற்றும் வட்டியை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுத்து தொழிலாளர்கள் வேலை இழப்பை தடுக்க நடவடிக்கை எடுக்கவும் பிரதமரை கேட்டுக் கொண்டுள்ளேன்.

அமெரிக்காவில் இந்தியப் பொருட்களை இறக்குமதி செய்பவர்கள் கூடுதல் வரி செலுத்த வேண்டும். இதனால், இந்திய பின்னலாடை அமெரிக்க சந்தையில் பிற நாட்டு ஜவுளிப் பொருட்களுடன் போட்டியிட முடியாமல் விற்பனை குறையும். எனினும் இங்கு, பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தங்கு தடையில்லாமல் உற்பத்தியானால் தான் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும்; நாட்டுக்கும் அந்நியச் செலாவணி கிடைக்கும்.

ஆயத்த ஆடை தொழிலில் ஏற்பட்டுள்ள தொய்வைப் போக்க இந்த தி.மு.க. அரசு உடனடியாக ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

### ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது

## நான்கு நாட்களிலேயே பாகிஸ்தான் மண்டியிட்டது: இந்திய விமானப்படை

புதுடெல்லி, செப். 01-

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களுக்கு எதிராக இந்தியா மே மாதம் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கையான ஆபரேஷன் சிந்தூர் குறித்த புதிய காட்சிகள் மற்றும் விவரங்களை இந்திய விமானப்படை துணைத் தளபதி ஏர் மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி பகிர்ந்து கொண்டார்.



மேலும் இந்தியாவின் தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியாமல் பாகிஸ்தான் 4 நாட்களிலேயே மண்டியிட்டது என்றும் இந்த தாக்குதலில் இந்தியா முழுமையாக ஆதிக்கம் செலுத்தியதாக டெல்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய விமானப் படை துணைத்தளபதி நர்மதேஷ்வர் திவாரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், "ஆபரேஷன் சிந்தூரில் 50-க்கும் குறைவான ஆயுதங்களிலேயே, தாக்குதலை நிறுத்துமாறு பாகிஸ்தான் கெஞ்சியது. பாகிஸ்தானை மண்டியிட வைத்து முழுமையான ஆதிக்கத்தை அடைய முடிந்தது எங்களுக்கு ஒரு முக்கிய படிப்பினையாக இருந்தது. இதற்கு முன்பு இது நடந்ததில்லை.

நாங்கள் ஒவ்வொரு ஆயுதத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டோம். அது எங்கள் திட்டமிடுபவர்கள் மற்றும் செயல்படுத்தியவர்களின் திறனை வலிமையாக ஒப்புக்கொள்வதாகும், 1971-ம் ஆண்டு போரில் தாக்குதலுக்கு ஆளாகாத பாகிஸ்தானின் சில இலக்குகள் கூட ஆபரேஷன் சிந்தூரில் எங்கள் தாக்குதலுக்கு உள்ளாகின. அந்த அளவுக்கு நாம் அவர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தினோம். எங்கள் திட்டமிடல் மற்றும் செயல்பாட்டு மக்களுக்குத்தான் இதற்கான பெருமை சேரும். ஏனெனில் இது எளிதான விஷயம் அல்ல. இந்தத் தாக்குதல்களுக்குப் பின்னால் இருந்த நோக்கம் பாகிஸ்தானுக்கு சரியான செய்தியை வழங்குவதுதான். அதை சரியாக செய்தோம் என்று கூறினார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

### தெருநாய் வழக்கு என்னை பிரபலமாக்கியது:

## சுப்ரீம் கோர்ட் நீதிபதி விக்ரம்நாத் பேச்சு

டெல்லி, செப். 01-

தெருநாய் வழக்கு என்னை பிரபலமாக்கியதாத சுப்ரீம் கோர்ட் நீதிபதி விக்ரம்நாத் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் உள்ள தேசிய தலைநகர் பகுதியில் உள்ள அனைத்து தெரு நாய்களையும் காப்பகத்தில் அடைத்து பராமரிக்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டில் இரு நீதிபகள் கொண்ட பெஞ்ச் உத்தரவிட்டது. இதற்கு பிராணிகள் விரும்பிகள் ஆட்சேபனை தெரிவித்தனர். இதனையடுத்து, தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், இந்த விவகாரத்தை மூன்று நீதிபகள் கொண்ட பெஞ்சிற்கு மாற்றினார்.

இதனையடுத்து டெல்லி தெருநாய்களை காப்பங்களில் அடைக்க வேண்டும் என்ற சுப்ரீம் கோர்ட்டில் 2 நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதித்து புதிய உத்தரவை 3 நீதிபதிகள் அமர்வு பிறப்பித்துள்ளது. பதிலாக தெருநாய்களை பிடித்து கருத்தடை, தடுப்பூசி செலுத்தி மீண்டும் அதே பகுதிகளில் விடலாம் என ஆலோசனை வழங்கியது.

இந்நிலையில், தெருநாய்களை காப்பங்களில் அடைக்க வேண்டும் என்ற உத்தரவுக்கு தடை விதித்த நீதிபதிகளில் ஒருவரான விக்ரம் நாத், தெருநாய் வழக்கு தன்னை உலகம் முழுவதும் பிரபலமடைய வைத்துள்ளதாக தெரிவித்தார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் தேசிய சட்ட சேவை ஆணையம் ஏற்பாடு செய்த மாநாட்டில் பேசிய நீதிபதி நாத், "நீண்ட காலமாக, நான் எனது சிறிய வேலைகளுக்காக சட்டத்துறையில் அறியப்பட்டிருக்கிறேன், ஆனால் இந்த நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள முழு சிவில் சமூகத்திலும் எனக்கு அங்கீகாரம் அளித்ததற்காக தெருநாய்களுக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். மேலும் இந்த வழக்கை எனக்கு ஒதுக்கியதற்காக நமது தலைமை நீதிபதிக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்'' என்று தெரிவித்தார். 2027 இல் இந்தியாவின் தலைமை நீதிபதியாக விக்ரம் நாத் பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வேளாங்கண்ணி திருவிழா:

## விழுப்புரம் – நாகப்பட்டினம் இடையே சிறப்பு ரெயில் இயக்கம்

சென்னை, செப். 01-

வேளாங்கண்ணி திருவிழாவை முன்னிட்டு விழுப்புரம் - நாகப்பட்டினம் இடையே சிறப்பு ரெயில் இயக்கப்பட்டது.

நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டுப்பெருவிழாவில் அதிகளவில் பக்தர்கள் பங்கேற்பார்கள். இதனால் பொதுமக்கள் வசதிக்காகவும், கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையிலும் விழுப்புரத்தில் இருந்து நாகப்பட்டினத்துக்கு சிறப்பு எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்பட உள்ளது. இதுகுறித்து திருச்சி கோட்ட ரெயில்வே மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

விழுப்புரத்தில் இருந்து செப்டம்பர் 8-ந்தேதி காலை 9.10 மணிக்கு புறப்படும் விழுப்புரம்-நாகப்பட்டினம் சிறப்பு எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 06133) அதே நாள் மதியம் 1.05 மணிக்கு நாகப்பட்டினம் ரெயில் நிலையத்தை சென்றடையும். அதேபோல் மறுமார்க்கத்தில் நாகப்பட்டினத்தில் இருந்து அதே நாளில் மதியம் 1.20 மணிக்கு புறப்படும் நாகப்பட்டினம்-விழுப்புரம் சிறப்பு எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 06131) மாலை 5.30 மணிக்கு விழுப்புரம் வந்தடையும்.

இந்த ரெயில்கள் பண்ருட்டி, திருப்பாதிரிப்புலியூர், கடலூர் துறைமுக சந்திப்பு, பரங்கிப்பேட்டை, சிதம்பரம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோவில், மயிலாடுதுறை சந்திப்பு, பேரளம் சந்திப்பு, திருநள்ளாறு, காரைக்கால், நாகூர் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## விஜய் சுற்றுப்பயணம்: மாவட்ட செயலாளர்களுக்கு த.வெ.க. உத்தரவு

சென்னை, செப். 01-

தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜய்யின் சுற்றுப்பயணம் உறுதியாகியுள்ள நிலையில் மாவட்ட செயலாளர்களுக்கு கட்சியின் சார்பில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபை தேர்தலை சந்திக்க அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. தற்போதைய சூழ்நிலையில் தமிழக அரசியல் களத்தில் தி.மு.க, அ.தி.மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி உறுதியாகியுள்ளது. பிரதான கட்சிகளாக உள்ள தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தங்களது தலைமையில் கூட்டணி அமைத்துள்ளது. நாம் தமிழர் கட்சி தனித்து களம் காண்கிறது. விஜய் தலைமையிலான த.வெ.க.வும் கிட்டத்தட்ட தனித்து போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. தே.மு.தி.க., பா.ம.க. ஆகிய கட்சிகள் எந்த அணியில் இணைவது என்று முடிவு செய்யவில்லை. ஜனவரிக்கு பிறகு கூட்டணி குறித்து முடிவு செய்வதாக தே.மு.தி.க. ஏற்கனவே அறிவித்துவிட்டது.

இந்த சூழ்நிலையில் மதுரையில் 2-வது மாநாட்டை நிறைவு செய்துள்ள த.வெ.க. தேர்தலுக்கான அடுத்தக் கட்ட நகர்வை நோக்கி நகர தொடங்கியுள்ளது. வரும் செப்டம்பர் மாதத்தில் இருந்து மக்கள் சந்திப்பை நடத்த விஜய் முடிவு செய்துள்ளார். த.வெ.க.வின் கொள்கை தலைவரான தந்தை பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17-ந்தேதி, ஈரோட்டில் இருந்து முதல் மக்கள் சந்திப்பை நடத்த விஜய் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதற்காக மாவட்ட செயலாளர்களுடன் தொலைபேசி வாயிலாக தொடர்ந்து விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். இதற்கிடையில், பனையூரில் உள்ள த.வெ.க. கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளர்களுக்கான ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் டெல்டாவையொட்டியுள்ள மாவட்டங்களை சேர்ந்த செயலாளர்கள், நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்த நிலையில், தவெக தலைவர் விஜய் சுற்றுப்பயணத்தை தொடங்குவதற்குள் 25,000 வாக்காளர்களுக்கு ஒரு ஒன்றிய செயலாளரை நியமனம் செய்ய மாவட்டச் செயலாளர்களுக்கு தவெக உத்தரவிட்டுள்ளது. ஏற்கெனவே ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஒரு ஒன்றிய செயலாளர் இருந்த நிலையில் தொகுதி வாக்குச்சாவடி அடிப்படையில் ஒன்றிய செயலாளர் பதவியை பிரிக்க கட்சியின் தலைமை அறிவுறுத்தி உள்ளது. வீடு வீடாகச் சென்று தவெக உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த மாவட்ட செயலாளர்களுக்கு விஜய் உத்தரவிட்டுள்ளார். மக்களின் பிரச்சினைகளை நேரடியாக கேட்டு தலைமையகத்திற்கு லிஸ்ட் அனுப்ப வேண்டும் என்றும் தொகுதி ரீதியாக இருக்கக்கூடிய அனைத்து பிரச்னைகளையும் கேட்டறிந்து அறிக்கை தயார் செய்ய வேண்டும் என்றும் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

### அமெரிக்க வரி விதிப்பால்

## கோவையில் 35 ஆயிரம் சிறு, குறு தொழில் நிறுவனங்கள் பாதிப்பு

கோவை, செப். 01-

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீத வரி தற்போது அமலுக்கு வந்துள்ளது. அமெரிக்காவிற்கு கோவையில் இருந்து அதிகளவில் தங்க நகைகள், என்ஜினீயரிங் பொருட்கள், ஜவுளி பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்திய அளவில் திருப்பூர், கோவையில் இருந்து தான் அமெரிக்காவுக்கு அதிகமான ஏற்றுமதி நடக்கிறது. இதில் ஜவுளி ஏற்றுமதி மட்டும் ஒரு ஆண்டிற்கு 11 பில்லியன் டாலர்கள் அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. 50 சதவீத வரிவிதிப்பால் இந்த பொருட்கள் ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கோவை, திருப்பூரில் பலர் வேலை இழக்கும் அபாயம் நிலவுகிறது.

கோவையில் 35 ஆயிரம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகிறது. இதில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பு காரணமாக இந்த தொழில் நிறுவனங்களுக்கு ஜாப் ஆர்டர்கள் தற்போது குறைந்துள்ளன. இது குறித்து சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்க ஜேம்ஸ் கூறியதாவது:-

வரி விதிப்பு காரணமாக ஏற்றுமதி பாதிக்கப்பட்டு உள்ளதால் எங்களுக்கு வழங்கப்படும் ஆர்டர்களும் குறைந்துள்ளது. இதனால் கோவையில் உள்ள 35 ஆயிரம் சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டு ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் உருவாகி உள்ளது.

எனவே மத்திய அரசு அமெரிக்காவிடம் இதுகுறித்து உரிய பேச்சுவார்த்தை நடத்தி இந்த பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு கூறினார்.

## கறுப்புக்கொடி காட்டிய நபருக்கு சாக்லேட் கொடுத்த ராகுல் காந்தி

பாட்னா, செப். 01-

பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதை கண்டித்து, வாக்காளர் அதிகாரம் என்ற பெயரில் நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி கடந்த 17-ந் தேதி முதல் யாத்திரை நடத்தி வருகிறார்.

சசாரமில் தொடங்கிய இந்த யாத்திரை, இன்று பாட்னாவில் நிறைவடைகிறது. இந்தநிலையில், ஆர்ரா பகுதியில் பிரசாரத்தில் ராகுல்காந்தி ஈடுபட்டார் அப்போது, பாஜக இளைஞர் அணி செயற்பாட்டாளர்கள் கருப்பு சட்டை அணிந்து கருப்பு கொடி அசைத்தும், அவரை எதிர்த்து கோஷமிட்டும் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தின் போது, ராகுல் காந்தியின் வாகனம் சென்றபோது, கருப்பு கொடி காட்டிய பாஜக இளைஞர்களில் ஒருவரை அவர் தன் பாதுகாப்பு பணியாளர்களிடம் அனுமதி அளித்து அருகில் அழைத்தார். அவருடன் சுருக்கமாக பேசிய பின், அவருக்கு சாக்லெட் கொடுத்து அனுப்பினார். இந்த காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல், சில நாட்களுக்கு முன்பு நவாடாவில் யாத்திரை சென்ற ராகுல் காந்திக்கு எதிராக பாஜக ஆதரவாளர்கள் கோஷம் எழுப்பியபோது, டர்பாங்காவில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடியையும், அவரது மறைந்த தாயாரையும் குறை கூறியதாக காங்கிரஸ் மீது பாஜக குற்றஞ்சாட்டியது. இதையடுத்து பாட்னாவில் எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டு, காங்கிரஸ் எம்.பி. மன்னிப்பு கோர வேண்டும் எனவும், மேலும், காங்கிரஸ் செயற்பாட்டாளர் முகமது ரிஸ்வி கைது செய்யப்பட்டு, 14 நாள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மதுரையில் 4-ம் தேதி நடக்க இருந்த ஓ.பி.எஸ். மாநாடு ஒத்திவைப்பு

சென்னை, செப். 01-

மதுரையில் வருகிற 4-ம் தேதி நடக்க இருந்த ஓ.பன்னீர் செல்வத்தின் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் தனது ஆதரவாளர்களுடன் முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் கடந்த மாதம் 14-ம் தேதி ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி குறித்து விமர்சிக்க வேண்டாம் என்றும் எடப்பாடி பழனிசாமியை விமர்சித்தால் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும் ஆதரவாளர்களுக்கு ஓ.பன்னீர் செல்வம் அறிவுறுத்தியதாக கூறப்பட்டது.

இதனிடையே அந்த ஆலோசனை கூட்டத்தில் தனது ஆதரவாளர்களுக்கு மத்தியில் பேசிய ஓ.பன்னீர் செல்வம், "அ.தி.மு.க.வை மீட்டெடுப்பதற்கான சட்ட போராட்டம் தொடரும். சட்ட போராட்டத்தில் உறுதுணையாக நின்ற அனைவருக்கும் நன்றி. அ.தி.மு.க.வை ஆட்சியில் அமர்த்தவே தர்மயுத்தம் நடத்தி கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் நம்முடைய நோக்கத்தை வென்றெடுப்போம். மக்களின் நன்மதிப்பை பெற்றவர்கள் மட்டுமே முதல்-அமைச்சராக முடியும். எடுத்துள்ள சில முடிவுகளை வெளியே சொல்ல முடியாது. அது என்ன என்பது குறித்து உங்களுக்கு தெரியும். எனது தலைமையில் வருகிற செப்டம்பர் மாதம் 4-ந் தேதி மதுரையில் மாநில மாநாடு நடத்தப்படும். எதிர்காலத்தில் நாம் என்ன முடிவுகளை எடுக்கப் போகிறோம் என்பது குறித்து மதுரை மாநாட்டில் அறிவிப்பேன்'' என்று கூறி இருந்தார்.

இந்நிலையில் செப்டம்பர் 4-ம் தேதி மதுரையில் நடைபெற இருந்த ஓ.பன்னீர் செல்வம் அணியின் மாநாடு ஒத்திவைக்கப்படுவதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

வருகிற 14-ம் தேதி அன்று சென்னை, வேப்பேரி, ரிதர்ட்டன் சாலையில் அமைந்துள்ள ஒய்.எம்.சி.ஏ. திருமண மண்டபத்தில் நடைபெற்ற தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க 4-09-2025 அன்று மதுரையில் நடைபெறுவதாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் மாநில மாநாடு கழக உயர்மட்டக் குழு ஆலோசனையின்படி ஒத்திவைக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



● அரசுமுறை பயணமாக ஜெர்மனிக்கு சென்றுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை அங்குள்ள தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அருகில் முதல்வரின் துணைவியார் துர்கா ஸ்டாலின், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



● ஜெர்மனி சென்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது துணைவியார் துர்கா ஸ்டாலினை தமிழக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

### அரசு முறை பயணமாக ஜெர்மனி சென்றடைந்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழர்கள் உற்சாக வரவேற்பு

## தமிழ்நாட்டின் எதிர்காலத்தை பிரகாசமாக்கும் வகையில் முதலீடுகளை ஈர்க்கவுள்ளதாக தகவல்

சென்னை, செப். 01-

ஜெர்மனி சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. டசெல்டோர்ஃப் விமான நிலையத்திற்கு வந்தடைந்த முதல்வருக்கு, நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள், குழந்தைகள், சமூகத் தலைவர்கள் மற்றும் குடும்பத்தினர் மலர்கள் மற்றும் பதாகைகளை ஏந்தி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தமிழ்நாடுக்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் ஜெர்மனியின் டசெல்டோர்ஃப் நகருக்குச் சென்றுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இது குறித்து அரசு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டுக்கு புதிய முதலீடுகளை ஈர்ப்பதையும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களுடன் தொடர்புகொள்வதையும் நோக்கமாகக் கொண்ட 8 நாட்கள் ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கான ஐரோப்பிய பயணத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று முன்தினம் தொடங்கினார்.

டசெல்டோர்ஃப் சர்வதேச விமான நிலையத்தை அவர் வந்தடைந்தபோது, வட ரைன்-வெஸ்ட்பாலியா மாகாணத்தின் முதல்வர் ஹென்ட்ரிக் வூஸ்ட் சார்பாக, அவருடைய அரசின் தூதரக விவகாரங்கள் மற்றும் அரசு முறை வரவேற்புப் பிரிவின் அன்யா டி வூஸ்ட், பெர்லினில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பொறுப்பாளர் அபிஷேக் துபே மற்றும் ஃபிராங்க்பர்ட்டில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் பொறுப்புத் துணைத் தூதர் விபா காந்த் ஷர்மா ஆகியோர் அவரை அன்புடன் வரவேற்றனர்.

டசெல்டோர்ஃப் விமான நிலையத்திற்கு அவர் வந்தடைந்தவுடன், நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள், குழந்தைகள், சமூகத் தலைவர்கள் மற்றும் குடும்பத்தினர் மலர்கள் மற்றும் பதாகைகளை ஏந்தி உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்த வரவேற்பு, தமிழ்நாட்டின் உலகளாவிய கலாச்சாரப் பெருமையையும், ஓர் அரசியல் தலைவராக முதல்வரின் சர்வதேச மதிப்பையும் பறைசாற்றியது.

ஜெர்மனியில் அவரது பயணத்திட்டத்தின் ஒரு பகுதியாக முதல்வர், நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொள்ளும் மாபெரும் அயலக தமிழர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்க உள்ளார். இந்நிகழ்ச்சியில் ஐரோப்பா முழுவதும் உள்ள தமிழ்ச் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் பண்பாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

மேலும், தமிழ் அடையாளத்தைப் பாதுகாப்பதற்கும், தமிழ்நாட்டின் சிறப்பினை வெளிநாடுகளில் மேம்படுத்துவதற்கும் பங்களித்த ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பல தமிழ்ச் சங்கங்களை அவர் கவுரவிக்கவுள்ளார்.

முதல்வர் டசெல்டோர்ஃபில் உயர்நிலை முதலீட்டாளர் மாநாட்டிற்கு தலைமை ஏற்று, உலகளாவிய முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் துறை தலைவர்களுடன் நேரடியாக கலந்துரையாடுகிறார். மேலும், தமிழ்நாட்டில் முதலீடு செய்யவும், தங்கள் தொழில் திட்டங்களை விரிவுபடுத்தவும் விரும்பும் முக்கிய முதலீட்டாளர்களை முதல்வர் ஸ்டாலின் தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தியாவின் மிகவும் தொழில்மயமான மாநிலமான தமிழ்நாட்டிற்கும், ஜெர்மனியின் மிகவும் தொழில்மயமான மாகாணமான வட ரைன்-வெஸ்ட்பாலியாவுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் ஒரு பகுதியாக, வடரைன் - வெஸ்ட்பாலியா மாகாண முதல்வர் ஹென்ட்ரிக் வூஸ்ட் உடன் ஸ்டாலின் சந்திப்பை நடத்துகிறார்.

ஜெர்மனி பயணத்திற்குப் பின், ஸ்டாலின் இங்கிலாந்துக்குச் சென்று, அங்கும் முதலீட்டாளர்கள் சந்திப்புகள், தமிழ் மக்களுடன் கலந்துரையாடல்கள் மற்றும் கல்வித் துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



● சென்னை மாநகராட்சி மணலி மண்டலத்திற்குட்பட்ட எவர்வின் வித்யாஸ்ரம் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவச்சான்றினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

# 2 நாள் பயணமாக நாளை தமிழ்நாடு வருகிறார் ஜனாதிபதி திரௌபதி முர்மு

சென்னை, செப். 01-

***2 நாள் பயணமாக நாளை ஜனாதிபதி திரௌபதி முர்மு தமிழகம் வருகிறார்.***

திருவாரூரில் உள்ள மத்திய பல்கலையின், 10-வது பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்க உள்ளார். இவ்விழாவில், மாணவர்களுக்கு பட்டங்களை வழங்குவதுடன், படிப்பில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு தங்க பதக்கங்களையும் முர்மு வழங்க உள்ளார்.

டெல்லியில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் வரும் அவர், அங்கிருந்து ஹெலிகாப்டரில், திருவாரூர் மத்திய பல்கலை செல்கிறார். முன்னதாக, ஸ்ரீரங்கம் கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அதனை தொடர்ந்து செப்.2ம் தேதி சென்னை நந்தம்பாக்கத்தில் சிட்டி யூனியன் வங்கி 120ஆவது ஆண்டு விழாவில் ஜனாதிபதி பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு ஜனாதிபதி திரௌபதி முர்மு, அங்கிருந்து விமானம் மூலம் டெல்லிக்கு புறப்பட்டு செல்கிறார்.



● சென்னை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை சார்பில் வருகிற சட்டமன்ற தேர்தலை சிறப்பாக எதிர்கொள்வது குறித்து நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு வருகை தந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு மாநில பாசறை இணைச்செயலாளர் ஜெ.இஷிகா நாச்சியார் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். அருகில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சி.சீனிவாசன், எஸ்.பி.வேலுமணி மற்றும் பாசறை மாநில செயலாளர் பரமசிவம் ஆகியோர் உள்ளனர்.



● செப்டம்பர் 2-ம் தேதி முதல் மதுரை மாநகரில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி "மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்" என்ற எழுச்சி பயணத்தை மேற்கொள்ள உள்ளார். இதற்காக மதுரை பரவையில் எழுச்சி பயணத்திற்கான பிரச்சார எல்இடி வாகனம் மற்றும் நிழற்குடைகளை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் மாநில மகளிரணி செயலாளர் பா.வளர்மதி மற்றும் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் உசிலை ஜெயபால், பரவை ராஜா, கு.திரவியம், சண்முகவள்ளி, வி.பி.ஆர்.செல்வகுமார், ஏ.பார்த்திபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.







தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சாரல் மழை பெய்து வருவதால் அனைத்து அருவிகளிலும் தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்பட்டது. விடுமுறை தினமான நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகளும் பொதுமக்களும் குளித்து மகிழ்ந்தனர்.



தென்காசி மாவட்டத்தில் இலஞ்சி ராமசாமிபிள்ளை மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாமுக்கு வருகை தந்த தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமாரை பேரூர் திமுக ஐடி விங் சார்பாக வரவேற்றனர். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி,பேரூராட்சி மன்ற தலைவர் சின்னதாய், நித்யா தென்காசி கிழக்கு ஒன்றிய பிரதிநிதி, பேரூர் தகவல் தொழில்நுட்ப மகளிரணி ஒருங்கிணைப்பாளர் தேவி சிவகுமார் கலந்து கொண்டனர்



சுரண்டையில் விநாயகர் சிலைகள் விஜர்சனம் செய்வதற்காக கொண்டு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


கடையநல்லூர் தாமரைகுளம்

## சுடலை மாடசுவாமி திருக்கோவில் ஆவணி பெருங்கொடை விழா இன்று தொடங்கி மூன்று நாட்கள் நடக்கிறது

கடையநல்லூர் செப்.01-

கடையநல்லூர் தாமரைகுளம் அருள்மிகு சுடலைமாடசுவாமி திருக்கோவில் ஆவணி பெருங்கொடை விழா இன்று துவங்கி மூன்று நாட்கள் நடக்கிறது.

கடையநல்லூர், மேலக்கடையநல்லூர் தாமரைகுளம் அருள்மிகு சுடலைமாடசுவாமி திருக்கோயில் தென்மாவட்டங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற திருக்கோவிலாகும்.



கேட்டவரம் கிடைக்கும், கேடு விட்டொழியும், நாட்டமும் ஈடேறும், நல்லதே நடந்தேறும், பாசமுடன் தாமரை குளத்து அப்பனை நேசமுடன் நெஞ்சுருகி நினைப்பவர்கே என்று பாடல் பெற்ற ஸ்தலமாகும்.இங்கு ஆண்டு தோறும் ஆவணி மாதம் நடைபெறும் கொடைவிழா மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இதில் தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் இருந்து பக்தர்கள் கலந்து கொள்வர். இந்த ஆண்டு கொடைவிழா இன்று துவங்கி மூன்று நாட்கள் நடக்கிறது.இன்று மாலை குடி அழைப்பு நிகழ்ச்சி நடக்கிறது. நாளை காலை அருள்மிகு மாசானமூர்த்தி சாமிக்கு சிறப்பு பூஜையும், தொடர்ந்து மஞ்சள் நீராட்டு விழாவும் நடக்கிறது. மதியம் பால்குடம் எடுக்கும் நிகழச்சியும், சுவாமி அம்பாள் மற்றும் பரிவார தேவதைகளுக்கு அபிசேகமும், பூஜைகளும், பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் நடக்கிறது.இரவு 12 மணிக்கு கொடை விழாவின் முக்கிய நிகழ்வான மயானம் சென்று வந்து பக்தர்களின் குறை தீர்க்கும் நிகழ்ச்சி நடக்கிறது. நாளை மறுநாள் மதியம் மயானம் சென்று வருதல், உச்சி பூஜை மற்றும் சிறப்பு அன்னதானம் நடக்கிறது.

பெருங்கொடை விழா ஏற்பாடுகளை விழா கமிட்டியார் செய்து வருகின்றனர்.

தெற்கு பனவடலியில்

## புதிய பள்ளி கட்டிடம்: ராஜா எம்எல்ஏ திறந்து வைத்தார்



சங்கரன்கோவில். செப்.1

சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் தெற்கு பனவடலி கிராமத்தில் டிடீடிஏ பள்ளியில் புதிய கட்டிடம் திறக்கும் நிகழ்ச்சி நடந்தது

நிகழ்ச்சிக்கு சிஎஸ்ஐ நெல்லை பேராயர் பர்னபாஸ் தலைமை வகித்தார். ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி மேலாளர் ஸ்டீபன் முல்லர் முன்னிலை வகித்தார். புதிய புதிய பள்ளி கட்டிடத்தை பேராயர் பர்னபாஸ் பிரதிஷ்டை செய்து திறந்து வைத்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ பள்ளி கட்டிடம் கட்டுவதற்காக ரூபாய் 25000 நிதி வழங்கி, புதிய பள்ளி கட்டிடத்தின் கல்வெட்டை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை, பள்ளி தலைமை ஆசிரியை விக்டோரியா, சேகரகுரு, திரவியராஜேஷ், உதவி ஆசிரியர் ராஜ பாண் டி யன், சேக ரத் தலைவர் ஜெயக்குமார்,சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி சண் மு கப் பாண் டி யன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் பூலியூர் கணேசன்,தகவல் தொழில்நுட்ப அணி வீமராஜ்,கிளைக் கழக செயலாளர் திலீப், ஆசிர்வாதம் மாணவரணி மெகுமான் மற்றும் பொதுமக்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் க லந்து கொண்டனர்.

கடையநல்லூர் நகராட்சி பகுதிகளில்

## மரக்கன்றுகள் நடும் பணி: நகர்மன்றத் தலைவர் மூப்பன் ஹபிபூர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது





கடையநல்லூர் செப்.01-

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், ஆணையின் படியும், திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், ஆய்வுக் கூட்ட அறிவுரையின்படியும், நகராட்சி ஆணையாளர் .ரவிச்சந்திரன் அறிவுறுத்தலின்படி கடையநல்லூர் நகராட்சி பகுதிகளில் நகர்ப்புற பசுமையாக்கல் திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு மக்கள் பங்களிப்புடன் விழிப்புணர்வு மற்றும் நகர்ப்பகுதிகளில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நகர்மன்றத் தலைவர் மூப்பன் ஹபிபூர் ரஹ்மான் தலைமையிலும், நகராட்சி சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர்,, 26 வது வார்டு நகர மன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன்,28 வது வார்டு நகர மன்ற உறுப்பினர் மாரி முன்னிலையில், மேலக்கடையநல்லூர் நகராட்சி பசுமை நுண் உரமாக்கும் மையம், மேலக்கடையநல்லூர் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகம், மேலக்கடையநல்லூர் அண்ணாமலை ஊரணி கரைகள் மற்றும் கடையநல்லூர் நகராட்சி கசடு கழிவு மேலாண்மை மைய வளாகம், போகநல்லூர் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் பங்களிப்புடன் சுமார் 100 மரக்கன்றுகள் நடப்பட்டது. இந்நிகழ்வில் கடையநல்லூர் நகர் மன்றத் தலைவர் மூப்பன் ஹபிபூர் ரஹ்மான், நகராட்சி சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர் முன்னிலையில் கடையநல்லூர் நகர் மன்ற உறுப்பினர்கள், கடையநல்லூர் நகராட்சி சுகாதார ஆய்வாளர் மாதவராஜ்குமார், நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர், பணியாளர்கள், 26 ஆவது வார்டு செயலாளர் பாலசுப்ரமணியன், தன்னார்வலர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள், களப்பணி உதவியாளர், தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள், டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கோவில்பட்டியில்

## முன்னாள் நகர்மன்ற தலைவர் மறைவுக்கு அஞ்சலி



கோவில்பட்டி செப்.01-

கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியின் முதல் எம்எல்ஏ கொடை வள்ளல் ராமசாமி தாஸ் மகன் திமுக முன்னோடி முன்னாள் நகர மன்ற தலைவர் தம்பி. பாலசுப்பிரமணியம் மறைந்த 30வது நாள் நினைவு விழா தனியார் மண்டபத்தில் வைத்து நடந்தது. நகர்மன்ற தலைவர் கா. கருணாநிதி, திமுக கிழக்கு நகர செயலாளர் சுரேஷ் முன்னாள் மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் மகாலட்சுமி சந்திரசேகர், முன்னாள் யூனியன் சேர்மன் கஸ்தூரி சுப்புராஜ், நகராட்சி கவுன்சிலர்கள் பூல் பாண்டியன் முத்துலட்சுமி, லவராஜா, உலகம்மாள்., வழக்கறிஞர். ஜோசப் செங்குட்டுவன், தம்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் மனைவி கிரிஜா மகன் அஸ்வின் மகள் சரஸ்வதி மற்றும் ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர். பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நகர மன்ற தலைவர் கா. கருணாநிதி அஞ்சலி செலுத்தி அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.

மாப்பிள்ளையூரணி இந்திராநகரில்

## விநாயகர் சதுர்த்தியையொட்டி மாட்டு வண்டி பந்தயம்




கோவில்பட்டி செப்.01-

ஓட்டப்பிடாரம் அருகே மாப்பிள்ளையூரணி இந்திரா நகரில் அமைந்துள்ள இந்திர சக்தி விநாயகர் திருக்கோவில் 35ம் ஆண்டு சதுர்த்தி விழாவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தை அ.தி.மு.க தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளரும் கோவில்பட்டி நகர் மன்ற உறுப்பினருமான எம்.ஆர்.வி.கவியரசன் கொடியசைத்து துவக்கி வைத்து வெற்றி பெற்ற காளைகள் மற்றும் சாரதிகளுக்கும் பரிசுகள் வழங்கி பாராட்டி பேசினார்.இந்த போட்டியில் தூத்துக்குடி, நெல்லை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களை சார்ந்த 64 மாட்டு வண்டிகள் சின்னமாடு, பூஞ்சிட்டு, தேன்சிட்டு, தட்டான்சிட்டு என நான்கு பிரிவுகளாக கலந்து கொண்டன

இந்நிகழ்வில் விழா கமிட்டியினர்கள் வைரமுத்து ராஜேந்திரன் ராமச்சந்திரன் தங்கமாரிமுத்து கனகராஜ் லெப்ட் கனகராஜ் மனோஜ் மாரிமுத்து ஆகியோர் வரவேற்றனர் ஊர் தலைவர் ஆறுமுகசாமி செயலாளர் தர்மலிங்கம் பொருளாளர் தங்கராஜ் பொன்னுசாமி முன்னாள் பஞ்சாயத்து தலைவர்கள் முறம்பன் சுடலைமணி கவர்னகிரி பாலமுருகன் காசிராஜா அக்ரி பெருமாள்சாமி சூரியா பாண்டியன் இன்ஜினியர் அமிர்தராஜ் சூரியா சக்தீஸ்வரன் தினேஷ்குமார் சபேஸ் மீனாட்சி மற்றும் பார்வையாளர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்



ஆலங்குளம் மத்திய ஒன்றியம் மாணவரணி துணை அமைப்பாளர் வீராணம் முஸ்தபா விபத்தில் காயம் ஏற்பட்டு ஓய்வில் இருந்து வருகிறார். தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் நலம் விசாரித்து அன்னாரது மருத்துவ செலவிற்கு நிதி உதவி வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் அன்பழகன், சேக் முகமது, பாலசுப்ரமணியன்,அன்சார் அலி உடனிருந்தனர்.

## ஜே.பி.கல்லூரியில் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி



தென்காசி செப்.01-

ஜே.பி. கல்லூரி ஹெல்த் கிளப் மற்றும் தென்காசி ஆர் எஸ் வெல்னஸ் & நியூட்ரிஷன் சென்டருடன் இணைந்து, கல்லூரி கலையரங்கத்தில் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி அன்றாட வாழ்க்கையில் ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டது. செரியகொல்லாவைச் சேர்ந்த சர்வதேச நல்வாழ்வு பயிற்சியாளர் முனைவர். ரீனா டேவிட் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு முழுமையான ஆரோக்கியம், மற்றும் ஊட்டச்சத்து சார்ந்த பழக்க வழக்கங்கள் குறித்தும் அவர் விரிவாக எடுத்துரைத்தார். ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்ற ஊக்கம் அளித்தார்.கல்லூரி முதல்வர் முனைவர். மைக்கேல் மரிய தாஸ் உடல் ஆரோக்கியத்தின் அவசியம் குறித்து சிறப்புரையாற்றினார். கல்லூரி நிர்வாகி அருட் சகோதரி ஜூடி லிசா தலைமை விருந்தினருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். இந்த நிகழ்ச்சி சுகாதார கிளப் ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் முருகேஸ்வரி மற்றும் மலர் விழி ஆகியோரால் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆரோக்கியத்தைப் பேணும் எண்ணத்தை வலுப்படுத்தியது. முனைவர் ஷர்லின் உடல் ஆரோக்கியம் குறித்து முன்னுரை ஆற்றினார். .சுமித்ரா நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். முனைவர் சூர்யா நன்றியுரையாற்றினார்.

மேலும் கல்லூரி உயர் நிர்வாகி முனைவர் ஆரோக்கிய மேரி ள் வழிநடத்துதலின்படி கல்லூரி பேராசிரியர்கள் அனைவரின் ஒத்துழைப்பாலும் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவுற்றது.

திப்பணம்பட்டியில்

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



தென்காசி செப்.01

திப் ப ணம் பட் டி யில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை யூனியன் சேர்மன் காவேரிசீனித்துரை, ஒன்றிய திமுக பொறுப்பாளர் ரமேஷ் ஆகியோர் தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றனர்.

கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், திப்பணம்பட்டி ஊராட்சி பகுதிக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் திப்பணம்பட்டி சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றது.

ஊராட்சி மன்ற தலைவர் ஐவராஜா தலைமை வகித்தார். மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ், ஒன்றிய கவுன்சிலர்கள் மேரி மாதவன், ராஜேஸ்வரி முன்னிலை வகித்தனர்.

கீழப்பாவூர் யூனியன் சேர்மன் காவேரி சீனித்துரை, கீழப்பாவூர் தெற்கு ஒன்றிய திமுக பொறுப்பாளர் ஜெ. கே.ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்று, முகாமினை தொடங்கி வைத்தனர்.

இதில், ஊராட்சி மன்ற துணைத்தலைவர் வைத்திங்கம், வார்டு உறுப்பினர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக்களை வழங்கினர்.

## சந்திர கிரகணம்: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் வரும் 7-ந் தேதி பிற்பகல் தரிசனம் ரத்து

திருச்செந்தூர் செப் 1

சந்திர கிரகணத்தை முன்னிட்டு, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் வரும் செப். 7ஆம் தேதி பூஜை நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் பிற்பகல் 2 மணி வரை மட்டுமே பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து கோயில் நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு: சந்திர கிரகணம் செப். 7ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நிகழவுள்ளது.இதையொட்டி, இக்கோயிலில் அன்றைய தினம் அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு, 4.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 6 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம், காலை 10 மணிக்கு உச்சிகால அபிஷேகம், பிற்பகல் 2 மணிக்கு சாயரட்சை, பிற்பகல் 3 மணிக்கு ராக்கால அபிஷேகம், தொடர்ந்து பள்ளியறை பூஜைகள் நடைபெற்று மாலை 5 மணிக்கு கோயில் நடை திருக்காப்பிடப்படும்.இதனால், பிற்பகல் 2 மணிவரை மட்டுமே பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவர். செப். 8ஆம் தேதி அதிகாலை 5 மணிக்கு நடைதிறக்கப்பட்டு பக்தர்கள் வழக்கம்போல தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


புரட்சித் தமிழரின்
எழுச்சிப் பயணம்
செப்டம்பர் : 01,02,03.
ஆகிய தேதிகளில்
புறநகர் கிழக்கு மாவட்டம்
திருபரங்குன்றம் தொகுதி
மேலூர் தொகுதி, மதுரை கிழக்குதொகுதி
திருமங்கலம் தொகுதி,
மதுரை புறநகர் வடக்கு, மதுரை மாநகர் வடக்கு
ஆகிய தொகுதிகளுக்கு சூறாவளிபயணம்
மேற்கொள்ளும்
வாழும்
பென்னிகுவிக்கே!
வருக! வருக!!
பெரிய.செல்வம்
திருப்பாலை பகுதி மாவட்ட பிரதிநிதி
மாவட்ட இளைஞரணி து. செயலாளர் புறநகர் கிழக்கு மாவட்டம்


குடி மராமத்து
நாயகன்
அவர்களே வருக! வருக!!
புரட்சித் தமிழரின்
எழுச்சிப் பயணம்
M.இராமகிருஷ்ணன்
அமைப்புசாரா ஓட்டுநரணி மாட்ட செயனளர்
K.மாதவராஜ்
மாவட்ட இலக்கிய அணி துணை தலைவர்
அன்னப்பூரணா
T.தங்கராஜ் M.A.,
அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற மாநில துணைச் செயலாளர்
மதுரை புறநகர் மேற்கு மாவட்டம்


புரட்சித் தமிழரின்
எழுச்சிப் பயணம்
மக்களைக் காப்போம்
தமிழகத்தை மீட்போம்
தென் தமிழகத்திற்கு
எய்ம்ஸ் மருத்துவமனையை
போராடி பெற்றுத்தந்த
முதல்வரே!
வருக! வருக!!
1.9.2025 திருப்பரங்குன்றம், திருமங்கலம்
2.9.2025 மேலூர், மதுரை கிழக்கு, மதுரை வடக்கு
3.9.2025 மதுரை மேற்கு, மதுரை மையம், மதுரை தெற்கு
4.9.2025 சோழவந்தான், உசிலம்பட்டி
...வரவேற்று மகிழும்...
V.V.ராஜன் செல்லப்பா M.A.B.L., MLA.,
மதுரை புறநகர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர்
அ.இ.அ.தி.மு.க மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம்